بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 34

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

16 முஹர்ரம் 1443 ஹிஜ்ரி கமரி 26 ஸஹூர் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 26 ஆகஸ்ட் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

اَفَلَا يَتُوْبُوْنَ اِلَى اللّٰهِ
وَيَسْتَغْفِرُوْنَهٗ ط
وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ○

இதன் பின்னர் அவர்கள் அல்லாஹ்விடம் திரும்பி அவனிடம் (தங்கள் பாவங்களுக்காக) மன்னிப்புக் கோர மாட்டார்களா? அல்லாஹ்வோ மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (5:75)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இறைவனுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்பவர்களால் முந்தைய இறை அடியார்களுக்கு வழங்கப்பட்ட அருட்களிலிருந்து பயன் பெற முடியும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**உண்மையான ஞானங்களின் ஊற்றாக திருக்குர்ஆன் உள்ளது**

உண்மையான ஞானங்களின் ஊற்றாகவும், ஆதாரமாகவும் திகழும் திருக்குர்ஆனை அல்லாஹ் இந்த சமுதாயத்திற்கு வழங்கியுள்ளான். திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்ற மற்றும் உண்மையான இறையச்சத்தால் கிடைக்கின்ற உண்மைகளையும், இறை ஞானங்களையும் பெற்றுக் கொள்கின்ற நபருக்கு பனி இஸ்ராயீலின் நபிமார்களுக்கு ஒப்பானவராக ஆக்குகின்ற அறிவு கிடைக்கின்றது. ஆயினும் இது முற்றிலும் உண்மையாகும். அதாவது ஒரு நபருக்கு வழங்கப்பட்ட ஆயுதத்தை அவர் சரியாக பயன்படுத்தவில்லை என்றால் அது அந்த நபரின் தவறாக இருக்குமே தவிர அந்த ஆயுதத்தின் தவறல்ல. தற்போது உலகத்தின் நிலை இதுவாகவே இருந்து வருகிறது. திருக்குர்ஆன் போன்ற ஒப்பற்ற அருட்கொடை முஸ்லிம்களிடம் இருந்தபோதிலும் வழிகேட்டிலிருந்து இரட்சிப்பு வழங்கக்கூடிய மற்றும் இருளிலிருந்து வெளியேற்றுகின்ற வேதம் அவர்களிடம் இருக்கும்போதிலும் அவர்கள் அதனை கைவிட்டு விட்டனர். மேலும் அதன் தூய போதனைகளை பொருட்படுத்தவில்லை. விளைவு என்னவானதென்றால், அவர்கள் இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வெகு தொலைவில் சென்று விட்டார்கள். தற்போது உண்மையான இஸ்லாம் அவர்களுக்கு முன்னால் எடுத்துரைக்கப்படும்போது அவர்கள் அதனை முற்றிலும் அறியாதவர்களாகவும், கவனமற்றவர்களாகவும் இருப்பதால் உண்மையான நம்பிக்கையாளரைக் கூட காஃபிர் (நிராகரிப்பாளர்) என்று கூறி விடுகின்றனர்.

**இறைநேசராக ஆகுவதற்கு இறைவனால் வழங்கப்பட்ட ஆற்றலை பயன்படுத்த வேண்டும்**

ஏராளமான மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஆபாசமான மற்றும் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்கின்றனர். அவர்கள் இவ்வுலக பெருமையையும், உலக கண்ணியத்தையும், சொத்துக்களையும், செல்வங்களையும் விரும்புகின்றனர். இதுபோன்ற ஆசைகள் மற்றும் விருப்பங்களை முழுமை செய்து கொள்கின்ற திட்டங்களிலும், ஆலோசனைகளிலும் தமது வயதை இழந்து விடுகின்றனர். அவர்களின் ஆசைகள் உச்சத்தை அடைவதற்குள் மரணத்தின் தூது வந்து விடுகின்றது. அல்லாஹ் அவர்களுக்கும் ஆற்றலை வழங்கி இருந்தான். அவர்கள் ஆற்றலை பயன்படுத்தி இருந்தால் உண்மையை அடைந்திருப்பார்கள். அல்லாஹ் கருமித்தனம் காட்டுவதில்லை. ஆனால் அவர்கள் ஆற்றலை

*(தொடர்ச்சி 11 வது பக்கம்…)*

**உண்மையை ஒப்புக் கொள்வதற்கு உண்பதிலும் குடிப்பதிலும் எளிமையும் உலக பேராசைகளிலிருந்து விலகி இருப்பதும், வீண் ஆசைகளிலிருந்து தப்பித்திருப்பதும் அவசியமான விஷயங்களாகும். இந்த மூன்று விஷயங்களிலிருந்து ஒருவர் விலகவில்லையென்றால் பின்னர் அவர் உண்மையை தேடுவது வீணான காரியமாகும். உண்மை அவருக்கு வெளிப்பட்டு விட்டாலும் கூட அவர் அதனை ஒப்புக் கொள்வதிலிருந்து இழப்பிற்குரியவராகவே இருப்பார்**

ذَرْهُمْ يَأْكُلُوْا وَيَتَمَتَّعُوْا وَيُلْهِهِمُ الْأَمَلُ فَسَوْفَ يَعْلَمُوْنَ (15:4)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது இந்த மக்கள் பல்வேறு விவகாரங்களில் இஸ்லாத்ததின் மேன்மைகளை ஒப்புக் கொள்கின்றனர். மேலும் ஒப்புக் கொள்வர். ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் இஸ்லாத்தின் பக்கம் அடியெடுத்து வைப்பதற்கு நற்பேறு கிடைக்காது. ஐரோப்பிய மக்கள் இஸ்லாமிய விவகாரங்களின் மேன்மைகளை ஒப்புக் கொள்கின்றனர். ஆயினும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு தயாராக இல்லை. ஏனென்றால் (அவர்களுக்கு முன்) சமூகத்திற்கான கேள்வி வந்து விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவர்கள் தங்களது உணவு மற்றும் பருகுதல் தமது வியாபாரம், தொழில் மற்றும் தமது நீண்ட நெடிய ஆசைகள் ஆகியவற்றின் காரணமாக முஸ்லிமாக ஆகுவது கிடையாது. முந்தைய வசனத்தின் பொருளில் எழுந்த கேள்விக்கு ஒரு வகையில் இந்த வசனத்தில் பதில் வழங்கப்பட்டுள்ளது. அதாவது அந்த மக்கள் ஆசை கொள்கின்றனர். முஸ்லிமாக இருந்திருக்கலாமே என்று அவர்கள் ஆசை கொள்வர். ஆனாலும் அவர்கள் முஸ்லிமாக ஏன் ஆகுவதில்லை? அவர்களின் ஆடம்பரம் மற்றும் செல்வத்திற்கான பேராசை, நீண்ட நெடிய விருப்பங்கள் ஆகியவை அவர்களின் வழிகளில் தடையாக இருந்து வருகின்றன.

உண்மையை ஒப்புக் கொள்வதற்கு உண்ணுதல், பருகுதலில் எளிமையும், உலக பேராசைகளிலிருந்து விலகி இருப்பதும், நீண்ட நெடிய ஆசைகளிலிருந்து தப்பித்திருப்பதும் அவசியமான விஷயங்களாகும். எந்த நபர் உண்மையை பெற விரும்புகின்றாரோ அவருக்கு இந்த விஷயங்களிலிருந்து விலகி இருப்பது அவசியமாகும். அவர் இந்த மூன்று விஷயங்களிலிருந்து விலகவில்லையென்றால் அவரின் உண்மையின் தேடல் என்பது வீணான காரியமாகும். உண்மை அவருக்கு வெளிப்பட்டு விட்டாலும் கூட அப்போதும் அவர் அதனை ஒப்புக் கொள்வதிலிருந்து இழப்பிற்குரியவராக இருப்பார். மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக தமது உணவுத் தட்டுகளை நிராகரிப்பாளர்கள் மிகவும்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்…)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**புவைப் போர் மற்றும் காதிஸிய்யா போரில் எதிர்கொண்ட சம்பவங்களின் விளக்கம்**

**அல்லாஹ் தீமையை தீமையைக் கொண்டு அழிப்பதில்லை. மாறாக, தீமையை நன்மையைக் கொண்டு அழிக்கின்றான். அல்லாஹ் மற்றும் அடியாருக்கிடையில் கட்டுப்படுதலை தவிர்த்து வேறு எந்த உறவும் இல்லை**

**உங்களிடம் ஒரு கடினமான இன்னும் கூறுவதாக இருந்தால் மிகக் கடுமையான பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே உங்களிடத்திலும் உங்களின் தோழர்களிடத்திலும் நன்மைக்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள். மேலும் அதன் மூலம் வெற்றியை நாடுங்கள். ஒவ்வொரு பழக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு ஒரு வழிமுறை உள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். பொறுமை தான் நன்மைக்கான பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக வழிமுறை ஆகும் – (ஹஸ்ரத் உமர் (ரலி)**

**இந்த மகத்துவமிக்க மாற்றம் முஸ்லிம்களிடம் ஏன் ஏற்பட்டது? ஏனென்றால் திருக்குர்ஆனின் போதனைகள் அவர்களின் ஒழுக்கங்களிலும், அவர்களின் பழக்கவழக்கங்களிலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருந்தது – (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி)**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 ஜுலை 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **23 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்றைய நாட்களில் நாம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பை செய்து வருகின்றோம். அன்னாருடைய காலத்தில் நடைபெற்ற சில போர்களைப் பற்றியும் கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாகவே இன்றும் நான் எடுத்துரைப்பேன்.

புவைப் என்று கூறப்படும் ஒரு போர் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு நடைபெற்றது. சில வரலாற்று ஆய்வாளர்களின் பார்வையில் இது ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. நான் முந்தைய குத்பாவில் குறிப்பிட்டிருந்ததைப் போன்று ஜிஸ்ர் என்ற இடத்தில் அல்லது ஜிஸ்ர் போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு போர் குறித்த தகவலை அனுப்பினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீங்கள் உங்களது தோழர்களிடத்தில் திரும்பிச் செல்லுங்கள். மேலும் இஸ்லாமிய படை எங்கு உள்ளதோ அங்கேயே அவர்கள் நின்று கொள்ளட்டும். விரைவாக உதவி வந்து விடும் என்று தகவலை தெரிவிக்கும்படி தூதுவரிடத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அபூ ஹனீஃபா தீன்வரி அவர்கள் எழுதிய அக்பார் அத்தவால் என்ற நூல் பக்கம் 166, 167 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஜிஸ்ர் போரில் ஏற்பட்ட தோல்வியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது. அன்னார் (ரலி) அவர்கள் முழு அரபு நாட்டிலும் சொற்பொழிவாளர்களை அனுப்பினார்கள். அவர்கள் உணர்வுப்பூர்வமான சொற்பொழிவின் மூலமாக முழு அரேபியாவிலும் உணர்வு ஊட்டினார்கள். அரபு கோத்திரங்கள் இந்த சமுதாயப் போரில் பங்கு பெறுவதற்காக கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கி விட்டார்கள். அதில் கிருஸ்துவ கோத்திரங்களும் இருந்தன. முஸ்லிம்கள் மட்டுமே இருக்கவில்லை. மாறாக, கிருஸ்துவ கோத்திரங்களும் இருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் ஒரு படையை ஈராக்கிற்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் முஸன்னா அவர்களும் ஈராக்கின் எல்லைப் புற பகுதிகளிலிருந்து படையை ஒன்றுதிரட்டி விட்டார்கள். இந்தத் தகவல் ருஸ்தமிற்கு கிடைத்தவுடன் மஹ்ரான் என்பவரின் துணையுடன் ஒரு படையை முஸ்லிம்களை எதிர்கொள்வதற்காக அவன் அனுப்பி வைத்தான்.

கூஃபாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் ஒரு நகரம் உள்ளது. அது ஹேரா என்ற இடமாகும். அதற்கு அருகில் புவைப் என்ற இடம் உள்ளது. புவைப் என்ற இந்த இடம் கூஃபாவிற்கு அருகில் ஃபராத் நதியிலிருந்து புறப்படும் ஒரு நதிக்கு அருகில் உள்ளது. இந்த இடத்தில் இரண்டு படைகளும் அணிவகுத்து நின்றன. இந்தப் போர் ரமலான் மாதத்தில் நடைபெற்றது. இந்த இடத்திற்கு அருகிலேயே பிற்காலத்தில் கூஃபா நகர குடியேற்றம் நடைபெற்றது.

ஈரானிய தளபதியான மெஹ்ரான் இவ்வாறு கூறினான்: நதியைக் கடந்து நீங்கள் வருகின்றீர்களா? அல்லது நாங்கள் வரட்டுமா? என்று கேட்டான். அதற்கு ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் நீங்கள் கடந்து வாருங்கள். கடந்த போரில் முஸ்லிம்கள் நதியைக் கடந்து சென்றிருந்தார்கள் என்று கூறினார்கள். இந்த முறை அவன் இந்த நுட்ப வழிமுறையை மேற்கொண்டிருந்தான். நீங்கள் வாருங்கள் என்று அவன் ஈரானியர்களிடம் கூறியிருந்தான். ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் தனது படையை ஒழுங்குபடுத்தி அணிவகுத்து நிற்கச் செய்தார்கள். பின்னர் அவர்களை தனித்தனி படைப்பிரிவுகளில் பங்கிட்டு அவர்களுக்கு அனுபவம் வாய்ந்த தலைவர்களையும் நியமித்தார்கள். மேலும் ஷமூஸ் என்ற தனது பிரபலமான குதிரையின் மீது சவாரி செய்து இஸ்லாமிய படையின் அணிகளை சுற்றி வந்து ஆய்வு செய்தார்கள். ஒவ்வொரு கொடிக்கு அருகிலும் நின்று கொண்டு போர் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

மேலும் உணர்வுப்பூர்வமான சொற்களுடன் அவர்களது தைரியத்தை அதிகப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: இன்று அரபுகளின் மீது உங்களின் காரணமாக கறை ஏதும் ஏற்படாது என்று நான் நம்புகின்றேன். இறைவன் மீது ஆணையாக! எனது பார்வையில் உங்களில் சாதாரண நபருக்கு விருப்பத்திற்குரியதாக இருப்பதையே நான் இன்று எனக்காகவும் விருப்பத்திற்குரியதாக கருதுகிறேன். அதாவது நானும், நீங்களும் சமமானவர்கள் ஆவோம். அதாவது இஸ்லாத்தின் தொண்டரான அவர் உணர்வுப்பூர்வமான சொற்களில் தனது அன்பிற்குரிய தலைவரின் குரலுக்கு முழு உத்வேகத்துடன் செவிமடுத்தார். அந்த தலைவர் தனது சொல்லாலும், செயலாலும் எப்போதும் அவர்களுடன் தனது நீதியான நடைமுறையை மேற்கொண்டிருந்தார். துன்பத்திலும், இன்பத்திலும் இரண்டு நிலைகளிலும் அவர்களுடன் இருந்தார். அவருடைய ஒரு கூற்றில் விரலை உயர்த்துவதற்கு எவருக்கும் தைரியம் இருந்திருக்கவில்லை.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 372 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 23,

24 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 376 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 607)

நான் மூன்று முறை தக்பீர் கூறுவேன். நீங்கள் ஆயத்தமாகி விட வேண்டும். நான்காவது முறை தக்பீரை கேட்ட உடனேயே எதிரிகள் மீது நீங்கள் தாக்குதல் நடத்தி விட வேண்டுமென ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் படைக்கு வழிகாட்டி இருந்தார்கள். ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் முதல் முறை தக்பீர் முழக்கமிட்டபோது ஈரானிய படை உடனடியாக தாக்குதல் நடத்தி விட்டது. எனவே முஸ்லிம்களும் விரைந்து செயல்பட்டனர். முதல் தக்பீர் கூறிய உடனேயே பனூ அஜல் கோத்திரத்தைச் சேர்ந்த சில நபர்கள் தனது அணியை விட்டு வெளியேறி போரிட முன்னேறிச் சென்றார்கள். இவ்வாறு வரிசைகளில் வெற்றிடம் உருவானது.

ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் ஒரு நபரிடம் இந்தத் தூதுச் செய்தியை வழங்கி அவர்களை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அந்த தூதுச் செய்தி என்னவாக இருந்ததென்றால், இஸ்லாமிய படையின் தலைவர் கூறுகின்றார்: இன்று முஸ்லிம்களை அவமானப்படுத்தாதீர்கள் (என்று கூறியிருந்தார்). அதன் பிறகு அந்த கோத்திரம் தன்னை சரி செய்து கொண்டது. பின்னர் ஒரு கடுமையான போருக்குப் பிறகு ஈரானியர்களுக்கு மத்தியில் பதற்றம் தொற்றிக் கொண்டது. இந்தப் போரில் ஈரானியர்கள் சார்பாக கொலையுண்ட நபர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் என்று கூறப்படுகின்றது. ஈரானிய படையின் தளபதி மஹ்ரான் என்பவரும் இந்தப் போரில் கொல்லப்பட்டார். இந்தப் போர் يَوْمُ الْأَعْشَار என்றும் அழைக்கப்படுகின்றது. ஏனென்றால் இந்தப் போரில் 100 நபர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்றால், அவர்களில் ஒவ்வொருவரும் பத்து, பத்து நபர்களை கொலை செய்திருந்தார்கள்.

ஈரானிய படை தோல்வியுற்று பாலத்தை நோக்கி ஓடியது. நதியைத் தாண்டி தனது பாதுகாப்பான பகுதியின் பக்கம் சென்று விட வேண்டும் என்பதற்காக அவர்கள் பாலத்தை நோக்கி ஓடினார்கள். ஆனால் ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் தனது படையை அழைத்துக் கொண்டு அவர்களை பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் பாலத்தை தாண்டுவதற்கு முன்பாகவே அவர்களை சுற்றி வளைத்தார்கள். மேலும் நதியின் பாலத்தை உடைத்து ஏராளமான ஈரானிய இராணுவத்தினரை கொன்று விட்டார்கள்.

பிற்காலத்தில் ஹஸ்ரத் முஸன்னா அவர்களுக்கு இதன் மீது மிகவும் வேதனை ஏற்பட்டது. தோல்வியுற்று ஓடிய மக்களை நான் ஏன் பின்தொடர்ந்தேன்? நான் இவ்வாறு செய்திருக்கக் கூடாது என்று அன்னார் தனது வருத்தத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். என்னிடமிருந்து பெரும் தவறு நிகழ்ந்து விட்டது என அன்னார் கூறினார்கள். போரிடுவதற்கு ஆற்றல் பெறாத நபரிடம் நான் போர் செய்வது எனக்கு அழகல்ல. எதிர்காலத்தில் நான் ஒருபோதும் அப்படி செய்ய மாட்டேன் என்றும் கூறினார்கள். பின்னர் முஸ்லிம்களே! நீங்கள் ஒருபோதும் இவ்வாறு செய்யக்கூடாது. இந்த விவகாரத்தில் என்னைப் பின்பற்றாதீர்கள் என்று அன்னார் முஸ்லிம்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். தப்பி ஓடியவர்களை நான் பின்தொடர்ந்து சென்றேன். இது நான் செய்த தவறாகும். இவ்வாறு செய்திருக்கக்கூடாது என்றும் அன்னார் கூறினார்கள்.

உண்மையில் இது இஸ்லாமிய நல்லொழுக்கமாகும். இந்தப் போரில் இஸ்லாமிய படையில் பெரும் பெரும் தலைவர்கள் உதாரணமாக காலித் பின் ஹிலால் மற்றும் மஸ்வூது பின் ஹாரிஸ் ஆகியோரும் ஷஹீதாகி இருந்தனர். ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் ஷுஹதாக்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைத்தார்கள். மேலும் அன்னார் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! எனது வேதனையையும், துன்பத்தையும் இந்த விஷயம் எளிதாக்கி விட்டது. அதாவது இந்த மக்கள் இந்தப் போரில் பங்கு பெற்றார்கள். தைரியத்துடனும் துணிவுடனும் அவர்கள் செயலாற்றினர். மேலும் உறுதியுடன் நிலை நின்றார்கள். அவர்களிடம் எந்த வகையான பதற்றமும், கஷ்டமும் ஏற்படவில்லை. ஷஹாதத் பாவங்களின் மன்னிப்பிற்கு பரிகாரமாக அமைந்து விடுகின்றது என்ற விஷயமும் எனது துன்பத்தை எளிதாக்கி விட்டது என்று அன்னார் கூறினார்கள்.

இந்தப் போர் பற்றிய குறிப்பில் வரலாற்று ஆய்வாளர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். அதிலிருந்து முஸ்லிம் பெண்களின் தைரியமும், வீரமும் ஒளிபாய்ச்சப்படுகிறது. போர் மைதானத்திலிருந்து தொலைவில் இருந்த கவாதுஸ் என்ற இடத்தில் இஸ்லாமிய படையின் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. போர் முடிந்த பிறகு முஸ்லிம்கள் ஒரு படையுடன் குதிரையில் சவாரி செய்தவாறு முகாமிற்கு முன்னால் வந்தடைந்தார்கள். எதிரியின் படை நம்மீது தாக்குதல் நடத்த வந்துள்ளது என்ற தப்பெண்ணம் முஸ்லிம் பெண்களுக்கு ஏற்பட்டது. எனவே அவர்கள் மிக விரைவாக பிள்ளைகளை சூழ்ந்து கொண்டார்கள். பின்னர் கைகளில் கற்களை எடுத்துக் கொண்டு மடிவதற்கும் எதிரியை கொல்வதற்கும் ஆயத்தமாகி விட்டார்கள். இராணுவ படைப்பிரிவு அருகில் வந்தடைந்தவுடன் இவர்கள் முஸ்லிம்கள் என்பது தெரிய வந்தது. அப்போது அந்த படைப்பிரிவின் தலைவராக இருந்த அம்ர் பின் அப்துல் மஸீஹ் ''அல்லாஹ்வின் படையின் பெண்களுக்கு இதுவே அழகு'' என்று கூறினார்.

புவைப் போர் முடிந்து விட்டது. ஆனால் அது தமது முந்தைய ஆழமான அடையாளங்களையும், தாக்கங்களையும் விட்டுச் சென்றது. ஈரானுடைய இஸ்லாமிய திட்டத்தில் இதற்கு முன்பு ஒருபோதும் இந்த அளவிற்கு உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கவில்லை. இந்தப் போரின் தாக்கம் இவ்வாறு ஏற்பட்டிருந்தது. அதாவது ஈராக்கின் பெரும்பாலான இடங்களில் முஸ்லிம்களின் பாதங்கள் வலிமையுடன் நிலைகொண்டன. ஈராக்கிலிருந்து தஜல்லா வரை அவர்கள் வசமானது. சிறிய சண்டைக்குப் பிறகு சுற்று வட்டாரப் பகுதிகளை முஸ்லிம்கள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்கள். அதாவது முன்னர் விட்டுச் சென்ற பகுதியை பின்னர் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்கள். ஈரானிய படைகள் அதில் ஆச்சரியம் அடைந்தன. அவர்கள் தோல்வியுற்று தஜல்லாவின் மற்றொரு திசையில் சென்று தங்கி விட்டன. இந்த வெற்றிக்குப் பிறகு ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் முஸ்லிம்கள் பரவி விட்டனர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 373, 374 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 361–363 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 288–291 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 28, 29 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 376 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 607 & தாரீக் தப்ரி தொகுதி 2 பாகம் 2 பக்கம் 237, 238, 240, 241 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 82–84 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது)

அடுத்து 14 வது ஹிஜ்ரியில் காதிஸிய்யா போர் நடைபெற்றது. காதிஸிய்யா என்பது தற்போது ஈராக்கிலுள்ள ஓர் இடமாகும். மேலும் அது கூஃபாவிலிருந்து 45 மைல் தொலைவில் உள்ளது. ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் முஸ்லிம்கள் மற்றும் ஈரானியர்களுக்கு மத்தியில் காதிஸிய்யா என்ற இடத்தில் மிகக் கடுமையான போர் நடைபெற்றது. அதன் விளைவாக ஈரானிய அரசாங்கம் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்து விட்டது. பாரசீகர்களுக்கு முஸ்லிம்களின் வெற்றியைப் பற்றி தெரிய வந்தபோது அவர்கள் தமது தலைவர்களாக இருந்த ருஸ்தம் மற்றும் ஃபைர்ஸான் ஆகியோரிடம் கூறினார்கள்: நீங்கள் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு கொண்டிருந்தீர்கள். நீங்கள் இருவரும் பாரசீகர்களை பலவீனப்படுத்தி எதிரிகளின் தைரியத்தை அதிகரித்து விட்டீர்கள். தற்போது விவகாரம் எந்த எல்லையை அடைந்துள்ளது என்றால் நாம் இப்படியே இருந்தால் பின்னர் ஈரான் அழிந்து விடும். ஏனென்றால் பாக்தாத் மற்றும் சாபாத் என்ற மதாயினுக்கு அருகிலுள்ள இடங்களும், தக்ரீத் என்ற பாக்தாதிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஓர் இடமும் மட்டுமே எஞ்சியுள்ளது. நீங்கள் இருவரும் ஒன்றுபடாவிட்டால் நாங்கள் முதலில் உங்கள் இருவரையும் கொன்று விடுவோம். பின்னர் நாங்களும் தற்கொலை செய்து விட்டு நிம்மதியடைந்து விடுவோம். அதாவது பின்னர் நாங்கள் சுயமே போரிட்டுக் கொள்வோம்.

ருஸ்தம், ஃபைர்ஸஜன் மற்றும் பூரான் ஆகியோரை பதவி நீக்கம் செய்து விட்டு யஸ்தஜருத் என்பவரை பதவியில் அமர்த்தினர். அப்போது அவருக்கு வயது 21 ஆக இருந்தது. அனைத்து கோட்டைகளையும், இராணுவ முகாம்களையும் பலப்படுத்திக் கொண்டார்கள். பாரசீர்களின் இந்த நடவடிக்கைகளைக் குறித்து ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தகவல் கொடுத்தபோது, இறைவன் மீது ஆணையாக! நான் அஜ்மிவாசிகளின் (அரபி அல்லாதவர்களின்) அரசரை செல்வந்தவர்கள் மற்றும் அரசர்களைக் கொண்டு எதிர்க்கச் செய்வேன். எனவே ஒவ்வொரு தலைவரையும், ஆலோசகரையும், சொற்பொழிவாளரையும், கவிஞரையும் போருக்காக அனுப்பி வைத்தார்கள். மேலும் அஜமி பகுதிகளை விட்டு வெளியேறி உங்களுக்கும் அவர்களின் எல்லைகளுக்கும் அருகே உள்ள கடற்கரை பகுதிகளுக்கு வந்து விடுமாறு ஹஸ்ரத் முஸன்னா அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். ரபீஆ கோத்திரம் மற்றும் எகிப்திய மக்களையும் தம்முடன் இணைத்துக் கொள்ளும்படியும் அவருக்கு அன்னார் கட்டளையிட்டார்கள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 294, 298 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 187 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 45)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அரபு நாட்டில் நாலாபுறமும் தூதுவர்களை அனுப்பினார்கள். தலைவர்கள் அனைவரும் மக்காவில் ஒன்றுகூடும்படி கூறினார்கள். ஏனென்றால் ஹஜ் அப்போது அருகில் வந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஜ்ஜிற்காக புறப்பட்டார்கள். ஹஜ்ஜின்போது அரபு கோத்திரங்கள் எல்லா திசையிலிருந்தும் ஒன்று கூடியிருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஜ்ஜிலிருந்து திரும்பி வந்தபோது மதீனாவிலிருந்து ஒரு பெரும் படை ஒன்றுகூடியிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் படைக்கு சுயமே தலைமை தாங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமனம் செய்து விட்டு புறப்பட்டார்கள். சிரார் என்ற இடத்தில் முகாமிட்டார்கள். (சிரார் என்ற இடம் மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஒரு நீரூற்றாகும்). தற்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே போருக்கு செல்வது குறித்து அப்போது எந்த முடிவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று கூறுகின்றனர்.

(ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 82–84 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது)

படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டிருந்தார்கள். ஆயினும் சுயமே செல்வார்களா? அல்லது வேறு யாரையும் தளபதியாக நியமித்து அவர்களை அனுப்பி வைத்து விடுவார்களா? என்று எந்த முடிவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் தப்ரி என்ற வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களிடம் ஆலோசனை செய்தார்கள். அனைவரும் அன்னாரை பாரசீகம் செல்லும்படி ஆலோசனை வழங்கினார்கள். அனைத்துப் படையையும் தமது தலைமையிலேயே அழைத்துச் செல்லும்படி அவர்கள் கூறினர். சிரார் எனும் இடத்தை அடையும் வரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யாரிடமும் ஆலோசனை செய்திருக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் அந்த மக்களில் ஒருவராக இருந்தபோது அவர்கள் அன்னாரை அங்கு செல்வதிலிருந்து தடுத்தார்கள். நிச்சயம் படையை அழைத்துக் கொண்டு செல்லுங்கள் என்று மற்றவர்கள் கூறினர். ஆனால் வேண்டாம் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இதற்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தவிர்த்து வேறு எவரிடமும் நான் எனது தாய் தந்தையரை அர்ப்பணம் செய்ததில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இனி யாரிடமும் நான் அவ்வாறு செய்ய மாட்டேன். ஆனால் இன்று நான் கூறுகின்றேன். எனது தாய், தந்தையர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. இந்த விவகாரத்தின் இறுதி தீர்ப்பை தாங்கள் என்னிடம் விட்டு விடுங்கள் என்று அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். மேலும் தாங்கள் சிரார் என்ற அந்த இடத்திலேயே நின்று விடுங்கள். மேலும் ஒரு பெரும் படையை இங்கிருந்து அனுப்பி வைத்து விடுங்கள் என்றும் அன்னார் கூறினார்கள்.

பின்னர் அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: துவக்கத்திலிருந்து இதுவரை நீங்கள் இதனை கண்டு கொண்டு விட்டீர்கள். அதாவது அல்லாஹ் உங்களது படையுடன் எவ்வாறு தீர்ப்பு வழங்கி வருகின்றான்? என்பதை நீங்கள் பார்த்து விட்டீர்கள். தங்களது படை தோல்வியுறுகின்றது என்றால் அது உங்களுடைய தோல்வியாக இருக்காது. மேலும் துவக்கத்தில் நீங்கள் ஷஹீதாகி விட்டால் அல்லது தோற்று விட்டால் பின்னர் முஸ்லிம்கள் ஒருபோதும் தக்பீர் கூற முடியாது. அதேபோன்று லாயிலாஹா இல்லல்லாஹ் என்று சாட்சியமும் அவர்களால் வழங்க முடியாமல் போய் விடும் என்ற அச்சம் எனக்கு உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல ஆலோசனை வழங்கக்கூடிய நபர்களுடன் ஆலோசனை செய்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களின் ஆலோசனை அன்னாருக்கு கிடைத்து விட்ட பிறகு வேறு சில மக்களுடன் அன்னார் ஆலோசனை செய்தார்கள். அதன் பிறகு ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தி அதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்: அதாவது அல்லாஹ் மக்களை இஸ்லாத்தில் ஒன்றுகூட்டியுள்ளான். மேலும் அவர்களின் உள்ளங்களில் ஒருவர் மற்றவருக்காக அன்பை உருவாக்கியுள்ளான். இஸ்லாம் அனைவரையும் சகோதரர்களாக ஆக்கிவிட்டது. முஸ்லிம்களின் உள்ளார்ந்த நிலை உடலைப் போன்றதாகும். ஒரு பகுதிக்கு துன்பம் ஏற்பட்டால் மற்ற பகுதி அதனை உணராமல் இருக்க முடியாது. எனவே முஸ்லிம்களுக்கு அவசியம் என்னவென்றால், அவர்களின் விவகாரங்களில் அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டும். குறிப்பாக அவர்களில் புரியும் தன்மை கொண்ட நபர்களிடம் ஆலோசனை பெறப்பட வேண்டும். மேலும் எந்த விவகாரத்தில் உடன்பாடு ஏற்பட்டு விடுமோ அதனை பின்பற்றுவதும், அதற்கு கட்டுப்படுவதும் மக்களுக்கு அவசியமாகும். ஓர் அமீருக்கு அவசியம் என்னவென்றால், அவர் மக்களில் நல்ல ஆலோசனை வழங்கக்கூடியவரின் கருத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். அதாவது மக்களை குறித்து அவர்கள் வழங்கிய ஆலோசனைகளையும் போர் தொடர்பான அவர்களின் திட்டங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்களே! நான் உங்களைப் போன்று உங்களில் ஒருவனாக உங்களுடன் இருக்க விரும்புகின்றேன். போரில் பங்கு பெற விரும்புகின்றேன். ஆனால் உங்களில் ஆலோசனை வழங்கக்கூடிய நபர்கள் என்னை அதிலிருந்து தடுத்துள்ளார்கள். எனவே தற்போது நான் செல்ல வேண்டாம். வேறொருவரை அனுப்பி வைப்போம் என்று நான் முடிவெடுத்துள்ளேன் என்று கூறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 381 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 35–37)

தற்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு நபரை தேடிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் கடிதம் அன்னாருக்கு வந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அந்த நேரத்தில் நஜத் பகுதியின் தான தருமங்களை கண்காணிக்கும் பொறுப்பில் இருந்தார்கள். தளபதியாக ஆக்குவதற்கு தகுதிபடைத்த ஒரு நபரை எனக்கு கூறுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் உங்களுக்கு கிடைத்து விட்டார் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். யார் அவர்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு சஅத் பின் மாலிக் (ரலி) அதாவது சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) ஆவார் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஏனைய மக்களும் இந்த ஆலோசனையை ஆமோதித்தார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 382 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தப்ரி வரலாற்று நூலில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களை அமீராக நியமனம் செய்து அவருக்கு இவ்வாறு அறிவுரை செய்தார்கள். சஅதே! நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாமா என்றும், சஹாபி என்றும்

அழைக்கப்படுகின்றீர்கள் என்ற எண்ணம் உங்களுக்கு வேண்டாம். ஏனென்றால் அல்லாஹ் தீமையை தீமையைக் கொண்டு அழிப்பதில்லை. மாறாக, தீமையை நன்மையைக் கொண்டு அழிக்கின்றான். அல்லாஹ் மற்றும் அடியாருக்கு இடையில் கட்டுப்படுதலை தவிர்த்து வேறு எந்த உறவும் இல்லை. புறப்படும் நேரத்தில் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த அறிவுரையை செய்தார்கள். தனது அறிவுரையை நினைவிற் கொள்ளுமாறு அன்னார் அறிவுரை செய்தார்கள். உங்களிடம் ஒரு கடினமான இன்னும் கூறுவதாக இருந்தால் மிகக் கடுமையான பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே உங்களிடத்திலும் உங்களின் தோழர்களிடத்திலும் நன்மைக்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள். மேலும் அதன் மூலம் வெற்றியை நாடுங்கள். ஒவ்வொரு பழக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு ஒரு வழிமுறை உள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். பொறுமை தான் நன்மைக்கான பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக வழிமுறை ஆகும். பொறுமை செய்வீர்கள் என்றால் நன்மைக்கான பழக்கம் ஏற்படும். எனவே உங்களுக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு துன்பத்திலும், உங்களுக்கு வருகின்ற ஒவ்வொரு துக்கத்திலும் பொறுமையை மேற்கொள்ளுங்கள். அதன் மூலம் உங்களுக்கு இறையச்சம் கிடைக்கும்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பாகம் 2 பக்கம் 253, 254 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அடுத்து அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு ஷராஃபிலிருந்து ஈரான் பக்கம் அணிவகுத்து செல்லுங்கள். ஷராஃப் என்ற இடத்தில் ஒரு நீரூற்று உள்ளது. அந்த இடத்திலிருந்து அன்னார் கூறினார்கள்: இங்கிருந்து படை ஒன்றுதிரண்டுள்ளது. இங்கிருந்தே துவங்குங்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். மேலும் உங்களது அனைத்து விவகாரங்களிலும் அவனிடமே உதவி வேண்டுங்கள். மேலும் நினைவிற் கொள்ளுங்கள். எந்த சமுதாயத்தின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளதோ அந்த சமுதாயத்தை எதிர்கொள்வதற்கும் நீங்கள் செல்கின்றீர்கள். அவர்களிடம் உலக வசதி வாய்ப்புகள், பொருட்கள் மிக அதிகமாக உள்ளன. (அவர்களின்) போர் ஆற்றல் மிகவும் வலிமையாக உள்ளது. மேலும் போர் ரீதியில் மிகவும் கடினமானவர்களாகவும், எதிர்ப்பில் பாதுகாப்பாகவும் இருக்கின்ற பகுதியை சார்ந்தவர்களை எதிர்கொள்வதற்காக நீங்கள் செல்கின்றீர்கள்.

பாருங்கள்! அவர்களின் ஏமாற்றத்திற்கு ஆளாகி விடாதீர்கள். ஏனென்றால் அவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும், ஏமாற்றக்கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். நீங்கள் காதஸிய்யாவை அடையும்போது மலைப் பகுதியின் இறுதி எல்லையிலும், நிலப்பகுதி தொடங்கும் இடத்திலும் நீங்கள் இருப்பீர்கள். எனவே நீங்கள் அந்த இடத்திலேயே தங்கி இருக்க வேண்டும். அங்கிருந்து அசையக்கூடாது. அந்த இடத்திலேயே இருக்க வேண்டும் என்று இடத்தையும் கூறி இருந்தார்கள். நீங்கள் வந்த தகவல் எதிரிக்கு கிடைத்ததும் அவன் மிகவும் கோபமடைவான். மேலும் தனது அனைத்து ஆயுதங்களுடனும், படையுடனும், முழு ஆற்றலுடனும் உங்கள் மீது தாக்குதல் தொடுப்பான். அந்த நிலையில் நீங்கள் உங்கள் எதிரிக்கு முன்னால் முழுமையான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினால் உங்களுக்கு எதிரியுடனான போரில் நற்கூலி கிடைக்கும். உங்களது எண்ணமும் சரியானதாக இருக்கும். அந்த நிலையில் உங்களுக்கு அவர்கள் மீது வெற்றி கிடைக்கும். அதன் பின்னர் அவர்கள் ஒருபோதும் இதுபோன்று ஒன்றுகூடி உங்கள் மீது போர் தொடுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகின்றேன்.

ஒருவேளை அவர்கள் உங்களுக்கு எதிராக போர் புரிந்தாலும் அவர்களின் உள்ளங்கள் அவர்களுக்கு ஒத்துழைக்காது. அஞ்சக்கூடிய உள்ளங்களுடன் அவர்கள் உங்களுடன் போரிடுவார்கள். வேறொரு நிலை உருவாகி விட்டால் நீங்கள் ஈரானிய பகுதிகளில் மிக அருகில் இருக்கும் நிலப்பரப்பை விட்டு விலகி விடுங்கள். அதாவது பின்வாங்கக்கூடிய சூழல் உருவானால், தோல்விக்கான நிலை ஏற்பட்டால் பின்னர் அந்நிலையில் நீங்கள் அருகிலுள்ள மைதானத்திலிருந்து விலகி உங்களது பகுதியில் அருகில் இருக்கும் மலைப் பகுதிகளுக்கு சென்று விடுங்கள். இதன் விளைவாக உங்களது பகுதியில் உங்களுக்கு அதிக தைரியம் ஏற்படும். மேலும் அந்தப் பகுதிகளை நீங்கள் மிக அதிகமாக அறிந்து கொள்வீர்கள். ஈரானியர்கள் உங்களது பகுதியில் அச்சமடைந்து இருப்பர். மேலும் அவர்கள் இந்தப் பகுதியை குறித்து அறியாதவர்களாக இருப்பர். எந்த அளவுக்கென்றால் இறைவன் மீண்டும் அவர்களுக்கெதிராக போரிட்டு உங்களக்கு வெற்றி கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவான். வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று அன்னார் நம்பி இருந்தார்கள். தற்காலிகமாக அதுபோன்ற ஒரு நிலை உருவானாலும் கூட அப்போதும் இறுதி வெற்றி உங்களுடையதாகும்.

சுருக்கமாக, இந்தப் படையின் அனைத்து அசைவுகளும் செயல்பாடுகளும் மதீனாவிலிருந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனுப்பிய விரிவான கட்டளைக்கேற்ப நடந்து வந்தது. எனவே திப்ரி நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஷராஃப் என்ற இடத்திலிருந்து படை புறப்படுவதற்கான தேதியையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் காதிஸிய்யா என்ற இடத்தை அடைந்தவுடன் உதைப் என்ற இடத்திலும், அல்ஹஜானாத் மற்றும் உதைபுல் கவாதிஸ் ஆகிய இடங்களுக்கு மத்தியிலும் படை தங்க வேண்டும் என்றும் வழிகாட்டி இருந்தார்கள். அங்கு படையை கிழக்கிலும் மேற்கிலும் பரப்பி விட வேண்டுமென்றும் கூறி இருந்தார்கள். காதிஸிய்யாவிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள இடத்தில் ஒரு நீரூற்று இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து அங்கு இரண்டு உதைப் என்ற நீரூற்று இருந்ததாக தெரிய வருகிறது. இதுவும் வரலாற்றிலிருந்து கிடைக்கிறது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 386, 387 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 48–50 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 131 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 304)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களை 4000 முஜாஹிதீன்களுடன் ஈரானை நோக்கி அனுப்பி வைத்தார்கள். பிற்காலத்தில் 2000 யமனி மக்களும், 2000 நஜதி மக்களும் சேர்ந்து கொண்டனர். வழிப்பாதையில் பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த 3000 நபர்களும், அஷ்அஸ் பின் கைஸ் கிந்தியா (கோத்திரத்தின்) 1700 சிப்பாய்களும் படையில் இணைந்து கொண்டனர். முஸ்லிம்களிடம் ஏற்கனவே படை இருந்தது. படையின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து அங்கு முப்பது ஆயிரத்தையும் விட அதிகமான எண்ணிக்கை ஆகிவிட்டது.

இந்தப் படையின் முக்கியத்துவத்தை நாம் இந்த விஷயத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்த 30 சஹாபிகள் இடம் பெற்றிருந்தனர். அவர்களின் (பதர் போர் சஹாபிகளின்) எண்ணிக்கை 70 ஐ விட கூடுதலாகும் என்று தப்ரி அவர்கள் கூறுகின்றார். 310 ஐ விட கூடுதலான சஹாபிகளுக்கு இஸ்லாத்தின் தொடக்கம் முதல் பைத்துர் ரிஸ்வான் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமை கிடைத்திருந்தது. மக்கா வெற்றியின்போது பங்கு பெற்றிருந்த 300 சஹாபிகளும் அதில் இடம் பெற்றிருந்தனர். மேலும் சஹாபிகளின் பிள்ளைகள் என்ற பெருமிதத்தை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

பெற்றிருந்த 700 நபர்களும் அதில் இடம் பெற்றிருந்தனர். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் ஷராஃப் என்ற இடத்தை அடைந்து அங்கு முகாமிட்டார்கள். முஸன்னா அவர்கள் 8000 நபர்களுடன் கூஃபாவிற்கு அருகிலுள்ள ஓர் நீர் தடத்தில் அதவாது ஸூகார் என்ற இடத்தில் முஸ்லிம்களின் ஒரு படைக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். இந்த இடைப்பட்ட நேரத்தில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். அன்னார் அஷீர் பின் கஸாஸிய்யா அவர்களை தனது பிரதிநிதியாக நியமித்தார்கள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 299–302 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 333)

முஸன்னா அவர்கள் வஃபாத்தாகி விட்டார். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு படை தங்கக்கூடிய ஷராஃப் என்ற இடத்தின் முழுமையான நிலவரங்களை அனுப்பி வைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் படையின் வரிசைக் கிரமத்தை தாமே ஒழுங்குபடுத்தினார்கள். மேலும் முழு படையையும் பத்து, பத்து முஜாஹிதீன்களைக் கொண்ட குழுக்களில் பங்கிட்டு அவர்களுக்கு ஒரு, ஒரு தலைவரை நியமனம் செய்யுங்கள். மேலும் அந்த படைகளுக்கு ஒரு பெரும் அதிகாரியை நியமனம் செய்து விடுங்கள் என்றும் கடிதத்தில் எழுதினார்கள். அதன் பிறகு அவர்களின் எண்ணிக்கையை கணக்கீடு செய்து அவர்களை காதிஸிய்யாவை நோக்கி அனுப்பி வைத்து விடுங்கள். மேலும் உங்களது மேற்பார்வையில் முகீரா பின் ஷஃபா அவர்களின் படையை வைத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள். அதாவது முகீரா பின் ஷஃபாவை மற்றும் அவரது படையை நீங்கள் உங்களது மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு ஏற்படும் நிலவரங்களை விரிவாக எனக்கு அனுப்புங்கள். பின்னர் அன்றாடம் ஏற்படும் முன்னேற்றங்கள் அல்லது அன்றாட நிலவரங்களை எனக்கு கூறிக்கொண்டு வாருங்கள் என்று கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இந்த வழிகாட்டலுக்கேற்ப படையை ஒழுங்குபடுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு விரிவான சூழல்களை எழுதினார்கள். ஒவ்வொரு பத்து நபர்களுக்கும் ஒருவரை கண்காணிப்பாளராக நியமிப்பது என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த அதே நடைமுறையின் கீழ் எடுக்கப்பட்ட முடிவாகும்.

(தாரீக் தப்ரி தொகுதி 4 பக்கம் 115, 116 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

மற்றுமொரு கடிதத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். உங்களுக்கு நீங்களே அறிவுரை செய்து கொண்டிருங்கள். மேலும் உங்களது படையினருக்கும் அறிவுரை செய்து வாருங்கள். பொறுமையை மேற்கொள்ளுங்கள். பொறுமையை மேற்கொள்ளுங்கள். ஏனென்றால் நிய்யத்திற்கேற்பவே இறைவனிடமிருந்து பரிசு கிடைக்கின்றது. உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியிலும் நீங்கள் செய்ய இருக்கின்ற பணியிலும் நீங்கள் முழுமையாக விழிப்புடன் செயலாற்ற வேண்டும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். இறைவனிடம் ஆரோக்கியத்தை வேண்ட வேண்டும்.

لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ அதிகமாக ஓதிக் கொண்டிருக்க வேண்டும். உங்களது படை எங்கு அடைந்துள்ளது? உங்களுக்கு எதிராக யார் யாரை படைத் தளபதியாக எதிரி நியமித்துள்ளான்? என்பதை எனக்கு எழுதிக் கொண்டிருங்கள். ஏனென்றால் நான் சில வழிகாட்டல்களை உங்களுக்கு எழுத விரும்பினேன். ஆனால் உங்களைப் பற்றியும், உங்களுடைய எதிரியைப் பற்றியும் சில விவரங்கள் முழுமையாக எனக்கு தெரிந்திருக்கவில்லை. முழுமையான விவரங்களையும் எனக்கு எழுதுங்கள். எனவே நீங்கள் அவ்வாறு செய்தால் நான் உங்களுக்கு மேலும் வழிகாட்டல்களை வழங்குவேன். மேலும் முஸ்லிம் படையின் தங்குமிடத்தை விரிவாக எனக்கு எழுதி அனுப்புங்கள். அந்தப் பகுதியின் தன்மைகளையும், உங்களுக்கிடையிலும் ஈரானிய தலைநகரமான மதாயினிற்கு இடையிலுள்ள பகுதியின் தன்மைகளையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எனது கண்களுக்கு முன்னால் வந்து விடுகின்ற அளவிற்கு அதனை எனக்கு எழுதி அனுப்புங்கள். அதாவது முழுமையான நுட்பத்துடன் முழு விவரங்களையும் எழுதுங்கள். உங்களது முழு தன்மைகளையும் எனக்கு விளக்கமாக எழுதுங்கள். மேலும் இறைவனுக்கு அஞ்சுங்கள். மேலும் அவனிடமே நம்பிக்கை வையுங்கள். உங்களது பணிகளை பொறுத்தவரை அவன் மீதே நம்பிக்கை வையுங்கள். உங்களை விட்டு விட்டு வேறொருவரை அல்லது வேறொரு சமுதாயத்தை இந்தப் பணியை செயல்படுத்துவதற்கு அவன் கொண்டு வந்து விடக்கூடாது என்பதில் இறைவனை அஞ்சிக் கொண்டிருங்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 387 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மதிப்பிற்குரிய செய்யது மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஃது ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற நூல் பக்கம் 50, 51)

அதாவது எப்போதும் உங்கள் இறைவன் மீதான அச்சம் இருக்க வேண்டும். வேறொருவர் உங்களது இடத்தில் நியமிக்கப்பட்டு விடக்கூடாது. நீங்கள் இந்த பொறுப்பை நிறைவேற்றவில்லையென்றால் பின்னர் இறைவன் இந்தப் பணியிலிருந்து உங்களை அகற்றி விடுவான். மேலும் இந்த பணியை நிறைவேற்றுவதற்காக வேறொருவரை கொண்டு வந்து விடுவான். எந்நிலையிலும் இந்தப் பணி நடைபெறும்.

காதிஸிய்யா என்ற இடத்தை அடைந்து ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தமது படையின் தங்குமிடம் மற்றும் நாலாபுறமும் உள்ள எல்லையைக் குறித்து விரிவாக கடிதம் எழுதி அனுப்பினார்கள். நீங்கள் உங்களது இடத்திலேயே தங்கி இருங்கள். எந்த அளவுக்கொன்றால் எதிரி சுயமே உங்கள் மீது தாக்குதல் தொடுக்கட்டும். ஒருவேளை எதிரி தோற்றுவிட்டால் மதாயின் நகரம் வரை முன்னேறிச் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதில் அனுப்பினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 4 பக்கம் 117, 118 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடும்போது இந்தக் கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பிலும் இதனை எடுத்துரைப்பது அவசியமாகும். அதாவது ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கிலாஃபத் அவையின் வழிகாட்டலுக்கேற்ப காதிஸிய்யாவில் ஒரு மாதம் தங்கியிருந்தார்கள். ஆயினும் ஈரானியர்களிடமிருந்து எவரும் அன்னாரை எதிர்ப்பதற்கு முன்வரவில்லை. எனவே அந்த பகுதி மக்கள் ஈரானிய அரசரான யஸவ் ஜர்த் என்பவரின் பெயரில் இந்தக் கடிதத்தை எழுதினார்கள். அரபுவாசிகள் சிறிது காலமாக காதிஸிய்யாவில் தங்கியுள்ளார்கள். நீங்கள் அவர்களை எதிர்ப்பதற்கு ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் ஃபராத் எனும் இடம் வரை அமைந்துள்ள பகுதிகளை அழித்து விட்டார்கள். விலங்குகளையெல்லாம் கைப்பற்றிக் கொண்டார்கள். உதவி வரவில்லையென்றால் நாங்கள் அனைத்தையும் அவர்களிடம் ஒப்படைத்து விடுவோம் என்று கடிதம் எழுதினார்கள்.

இந்தக் கடிதத்திற்குப் பிறகு யஸவ் ஜருத் ருஸ்தமை அழைத்தார். அவன் சாக்குப்போக்குகளை கூறி போரில் பங்கு பெறுவதிலிருந்து விலகி வந்தான். ருஸ்தம் தப்பித்து வந்தான். தமது இடத்தில் ஜாலினியூஸை படையின் தளபதியாக நியமிக்க ஆலோசனை வழங்கினான். ஆனால் அரசருக்கு முன்னால் ருஸ்தமின் எந்தவொரு கூற்றும் எடுபடவில்லை. படையை அழைத்துக் கொண்டு அவனுக்கு செல்ல நேரிட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்: ருஸ்தமிற்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுப்பதற்கு புத்திசாலியான மற்றும் வீரமான மக்களை அவனிடத்தில் அனுப்பவும். உடனே போர் செய்து விடக்கூடாது. முதலில் எதிரிக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுக்க வேண்டும். அல்லாஹ் அந்த அழைப்பை எதிரியின் இழிவிற்கும், நமது வெற்றிக்கும் காரணியாக ஆக்குவான். நீங்கள் தினமும் எனக்கு கடிதம் எழுதிக் கொண்டிருங்கள் என்று கூறினார்கள்.

இதன் பிறகு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் மிகவும் பிரபலமான 14 நபர்களை தேர்ந்தெடுத்து ஈரானிய அரசவையில் தூதுவர்களாக அனுப்பி

வைத்தார்கள். அவர்கள் சென்று ஈரானிய அரசனான யஸவ் ஜர்திற்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர்களை அனுப்பினார்கள். முஸ்லிம்கள் குதிரைகளில் சவாரி செய்திருந்தார்கள். அந்த முஸ்லிம்களிடம் போர்வைகள் இருந்தன. அவர்களின் கரங்களில் சாட்டைகள் இருந்தன. முதன் முதலில் ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரன் அரசரிடம் பேசினார். பின்னர் முகீரா பின் ஸிராரா அவர்கள் பேசினார்கள். உங்களுடன் ஒன்று போர் நடக்கும் அல்லது நீங்கள் ஜஸ்யா கொடுக்க வேண்டும் என்று முகீரா அவர்கள் அரசரிடம் கூறினார்கள். நீங்கள் எங்களது தலைமையை ஒப்புக் கொண்டு ஜஸ்யா வரியை கொடுத்து விடுங்கள் அல்லது போருக்கு தயாராகிக் கொள்ளுங்கள். இது இனி உங்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். இருந்தபோதிலும் எங்களிடம் மற்றொரு விஷயமும் உள்ளது. நீங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டால் பின்னர் எல்லா விஷயங்களிலிருந்தும் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்வீர்கள் என்று கூறினார்கள்.

அதற்கு யஸவ் ஜர்த் இவ்வாறு கூறினான்: தூதுவர்களை கொலை செய்வது தடை செய்யப்படவில்லையென்றால் நான் உங்கள் அனைவரையும் கொலை செய்திருப்பேன். என்னிடத்தில் உங்களுக்கு எதுவும் இல்லை. இங்கிருந்து ஓடி விடுங்கள் என்று கூறினான். பின்னர் அவன் ஒரு கூடை மண்ணை கொண்டு வரும்படி கூறினான். என் புறமிருந்து இதனை எடுத்துச் செல்லுங்கள் என்றும் கூறினான். மேலும் அந்த தூதுவர்களை மதாயின் நகரத்தின் வாசல்களிலிருந்து வெளியேற்றிவிடும்படி கட்டளையிட்டான்.

ஆஸிம் பின் அம்ர் அவர்கள் அந்த மண்ணை வாங்கினார்கள். பின்னர் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு அதை கொடுத்தவாறு நற்செய்தி உண்டாகட்டுமாக. அல்லாஹ் நமக்கு இந்த நாட்டின் திறவுகோலை வழங்கி விட்டான் என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு பல மாதங்கள் வரை இரு தரப்பிலும் அமைதி நிலவியது. ருஸ்தம் தனது படையுடன் சாபாத் என்ற இடத்தில் தங்கி இருந்தான். யஸவ் ஜர்தின் வலியுறுத்தலுக்குப் பிறகும் போரிலிருந்து விலகி இருந்தான். எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள். இல்லையென்றால் நாங்கள் அரபுவாசிகளை ஏற்றுக் கொண்டு விடுவோம் என்று மக்கள் யஸவ் ஜர்திடம் மீண்டும் மீண்டும் கூறினார்கள். அதனால் நிர்பந்தத்திற்குள்ளாகி ருஸ்தம் போரிட முன்னேறினான். ஈரானிய படைகள் சாபாத் என்ற இடத்திலிருந்து வெளியேறி காதிஸிய்யா என்ற இடத்தை அடைந்து அங்கு முகாமிட்டுக் கொண்டனர். ருஸ்தம் சாபாத் என்ற இடத்திலிருந்து வெளியேறியபோது அவனுடன் இருந்த படையின் எண்ணிக்கை 1,20,000 (ஒரு லட்சத்தி இருபது ஆயிரம்) ஆக இருந்தது. மேலும் அதனுடன் 33 யானைகளும் இருந்தன. ருஸ்தம் மதாயின் நகரத்திலிருந்து காதிஸிய்யா நகரத்தை வந்தடைவதற்கு நான்கு மாத கால அளவை எடுத்துக் கொண்டான். ருஸ்தம் காதிஸிய்யா இடத்தில் வந்து தங்கியதற்குப் பிறகு அடுத்த நாள் காலை இஸ்லாமிய படையை ஆய்வு செய்தான். முஸ்லிம்கள் திரும்பிச் செல்வதற்கும், சமாதானத்திற்கும் ஆலோசனைகளை அவர்கள் முன் வைத்தான்.

சமாதானம் செய்து கொள்ளுங்கள். இல்லையென்றால் திரும்பிச் சென்று விடுங்கள் என்று ருஸ்தம் முஸ்லிம்களிடம் கூறினான். அதற்கு நாங்கள் உலகத்தை தேடி இங்கு வரவில்லை. மாறாக, எங்களது நோக்கம் மறுமையாகும் என்று முஸ்லிம்கள் தரப்பிலிருந்து பதில் தரப்பட்டது. அதற்கு தனது அவைக்கு முஸ்லிம்கள் தரப்பிலிருந்து பேச்சுவார்த்தை நடத்த தூதுவர்களை அனுப்புங்கள் என்று கோரிக்கை வைத்தான். ருஸ்தம் அவையில் நல்ல, விலை உயர்ந்த விரிப்புகள் விரிக்கப்பட்டன. மேலும் முழுமையான ஆடம்பரத்திற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ருஸ்தம் அமர்வதற்கு தங்கத்தினாலான அரியணை வைக்கப்பட்டது. மேலும் விரிப்புகளை விரித்து அதில் தங்க இழைகளால் தலையணை அமைக்கப்பட்டு மிகவும் அழகுபடுத்தப்பட்டன. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து முதன் முதலில் ஹஸ்ரத் ரிபிய்யி பின் ஆமிர் சென்றார்கள். அவர்கள் ருஸ்தமிடம் இந்த நிலையில் சென்றார்கள். அதாவது அன்னார் தனது ஈட்டியின் துணை கொண்டு சிறிய சிறிய அடிகளை எடுத்து வைத்தார்கள். அதன் காரணமாக ஈட்டியின் கூர்முனையினால் விரிப்புகளும், மெத்தைகளும் கிழிந்து கொண்டே சென்றன. அன்னார் ருஸ்தமிற்கு அருகில் சென்றார்கள். மேலும் கீழே அமர்ந்தவாறு தனது ஈட்டியை விரிப்புகளில் நட்டி விட்டார்கள்.

ஹஸ்ரத் ரிபிய்யி அவர்கள் மூன்று விஷயங்களை ருஸ்தமிற்கு முன் வைத்தார்கள். (1) நீங்கள் அனைவரும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளுங்கள். நாங்கள் உங்களை பின் தொடர மாட்டோம். மேலும் உங்களது நாட்டிலிருந்து எங்களுக்கு எந்த தொடர்பும் இருக்காது. பின்னர் நாட்டை நீங்களே நிர்வகித்துக் கொள்ளுங்கள். (2) ஜஸ்யா வரியை கொடுங்கள். அதை நாங்கள் ஒப்புக் கொண்டு உங்களுக்கு பாதுகாப்பு வழங்குவோம். ஜஸ்யா வரி செலுத்தி விட்டால் பின்னர் நாங்கள் உங்களை பாதுகாப்போம். (3) எந்தவொரு நிலையும் விருப்பமில்லையென்றால் பின்னர் நான்காவது நாள் உங்களுடன் போர் செய்யப்படும். இந்த மூன்று நாட்களில் எங்கள் புறமிருந்து போர் துவங்கப்படாது. ஆனால் நான்காவது நாள் சண்டை நடக்கும். ஆயினும் இந்த மூன்று நாட்களில் எங்கள் புறமிருந்து போர் ஆரம்பிக்காது. ஆயினும் நீங்கள் போரை தொடங்கி விட்டால் பின்னர் நாங்கள் போரிடும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடுவோம்.

அடுத்த நாள் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹுஸைஃபா பின் முஹ்ஸின் அவர்களை அனுப்பினார்கள். அவரும் ஹஸ்ரத் ருபிய்யி அவர்களின் மூன்று விஷயங்களை மீண்டும் கூறினார்கள். மூன்றாவது நாள் ஹஸ்ரத் முகீரா பின் ஷஃபா (ரலி) அவர்கள் சென்றார்கள். அன்னாரும் தனது உரையாடலின் இறுதியில் தனது முந்தைய இரண்டு தோழர்களின் இஸ்லாமை ஒப்புக் கொள்ளுதல், ஜஸ்யா வரி செலுத்துதல் மற்றும் போர் ஆகியவற்றை குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், நீங்கள் நிச்சயம் மடிவீர்கள் என்று ருஸ்தம் கூறினான். அதற்கு ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்கள், எங்களில் எவர் மரணிப்பாரோ அவர் சுவர்க்கம் செல்வார். உங்களில் எவர் மரணிப்பாரோ அவர் நரகம் செல்வார். மேலும் நம்மில் எவர் உயிருடன் இருப்பாரோ அவர் உங்கள் மீது வெற்றி கொண்டவராக இருப்பார்.

ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்களின் விஷயத்தைக் கேட்டு ருஸ்தம் மிகவும் ஆவேசமடைந்து சத்தியம் செய்து கூறினான்: அதாவது சூரியன் மீது ஆணையாக! நாளை இந்நேரம் முழுமையாக விடிந்திருக்காது. அதற்குள் நாங்கள் உங்கள் அனைவரையும் அழித்து விடுவோம்.

ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்களுக்குப் பிறகும் சில புரியும் தன்மை கொண்ட முஸ்லிம்களை ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ருஸ்தமின் அவைக்கு அனுப்பினார்கள். அவர்கள் மாலையில் திரும்பினார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை அணிவகுத்து நிற்க கட்டளையிட்டார்கள். மேலும் ஈரானியர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். நதியை தாண்டி வருவது உங்களது பணியாகும் என்று கூறினார்கள். பாலத்தின் மீது முஸ்லிம்களின் கட்டுப்பாடு இருந்தது. எனவே ஈரானியர்களுக்கு முழு இரவிலும் அதீக் எனும் நதியின் வேறொரு இடத்தில் பாலம் கட்ட நேரிட்டது.

ருஸ்தம் பாலத்தை தாண்டும் நேரத்தில் கூறினான்: நாம் நாளை முஸ்லிம்களை தூள் தூளாக்கி விடுவோம். அப்போது அவனது தோழர்களில் ஒருவர் கூறினார்: அல்லாஹ் நாடினால் நடக்கும். அந்த நபருக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இருந்திருக்கக்கூடும். அப்போது அல்லாஹ் விரும்பாவிட்டாலும் (நஊதுபில்லாஹ்) நாம் அவர்களை தூள் தூளாக்கி விடுவோம் என்று ருஸ்தம் கூறினான். முஸ்லிம்கள் அணிவகுத்து முழுமையாக தயாராக இருந்தனர். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களின் உடலில் கட்டிகள் தோன்றின. இதற்கிடையில் அன்னார் நோய்வாய்ப்பட்டார்கள். கட்டிகள் தோன்றின. சியாட்டிகா என்ற நோயின் காரணாக அன்னாரால் அமரக்கூட முடியாமல் போனது. அன்னார் முகங்குப்புற படுத்துக் கொண்டார்கள். நெஞ்சுக்கு கீழே தலையணை வைத்திருந்தார்கள். எனவே மாளிகையின் தளத்தின் மேலேயோ அல்லது மரத்தின் மேலேயோ அவர்கள் படுப்பதற்கு இடம் அமைக்கப்பட்டது. அதற்கு மேல் இருந்து கொண்டு படையை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் காலித் பின் அர்ஃபத் என்பவரை தனது பிரதிநிதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களிடம் உரை நிகழ்த்தினார்கள். ஜிஹாதிற்கு அவர்களுக்கு ஆர்வமூட்டினார்கள். அல்லாஹ்வின் வெற்றிக்கான வாக்குறுதியை நினைவூட்டிக் கொண்டிருந்தார்கள்.

பாரசீகர்களின் படைகள் அதீக் நதிக்கரையில் இருந்தது. இந்த அதீக் என்ற நதியும் ஃபராத்திலிருந்து வெளிப்படும் ஒரு நதியாகும். முஸ்லிம்களின் படைகள் குதைஸின் சுவர்களிலும், அகழ்களிலும் இருந்தன. கதைஸ் காதிஸிய்யாவைப் பொறுத்தவரை அதீக் நதியிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள ஒரு வளாகம் ஆகும். ஈரானிய படைகளில் முப்பதாயிரம் பேர் விலங்குகளால் கட்டப்பட்டிருந்தனர். அதாவது எவரும் ஓடிவிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக அவர்கள் தங்களுக்குள் ஒருவர் மற்றவருடன் விலங்குகளால் கட்டிக் கொண்டனர்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் சூரா அன்ஃபாலை ஓதும்படி முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார்கள். அந்த சூரா திலாவத் செய்யப்பட்டபோது முஸ்லிம்கள் ஓர் அமைதியை உணர்ந்தார்கள். லுஹர் தொழுகையை தொழுத பிறகு முஸ்லிம்கள் மற்றும் பாரசீகர்களுக்கு மத்தியில் போர் ஆரம்பமானது. அவர்கள் முஸ்லிம்களுக்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்தினர்.

பனூ தமீம் கோத்திரத்தின் தலைசிறந்த அம்பு எய்தும் வீரர்களை அழைத்து ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் உங்களின் அம்புகளின் மூலமாக இந்த யானைகளில் அமர்ந்திருப்பவர்களின் மீது தாக்குதல் நடத்துங்கள். பின்னர் வீரமான சிப்பாய்களுடன் நீங்கள் யானைக்குப் பின்னால் சென்று அவற்றின் சேணைகளைத் துண்டித்து விடுங்கள் என்று கூறினார்கள். எனவே எந்தவொரு யானை மீதும் எந்த சவாரியும் அமர்ந்திருக்கவில்லை. மேலும் அதன் மீது எந்த பொருட்களும் இருக்கவில்லை. சூரியன் மறையும் வரை போர் நடைபெற்றது. முதல் நாளில் பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த 500 முஸ்லிம்கள் ஷஹீதாகினர். அந்த நாள் யவ்மே அர்மாஸ் என்று கூறப்படுகின்றது. இரண்டாவது நாள் காலையில் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஷுஹதாக்களை நல்லடக்கம் செய்தார்கள். மேலும் காயமுற்றவர்களை பெண்களிடம் ஒப்படைத்தார்கள். ஏனென்றால் அவர்கள் அவர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

இதற்கிடையில் சிரியா நாட்டிலிருந்து முஸ்லிம்களுக்கு ஒரு படை கிடைத்தது. ஹஸ்ரத் ஹாஷிம் பின் உத்பா பின் வக்காஸ் (ரலி) அவர்கள் அந்த படையின் அமீராக இருந்தார்கள். அதற்கு அடுத்த பகுதிக்கு ஹஸ்ரத் கஃகாஃ பின் அம்ர் (ரலி) அவர்கள் அமீராக இருந்தார்கள். கஃகாஃ அவர்கள் மிக விரைவாக பயணம் செய்து அக்வாஸ் நாளன்று காலையில் படையுடன் வந்தடைந்தார்கள். கஃகாஃ அவர்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டார்கள். அதாவது தமது ஒவ்வொரு முந்தைய படைப் பிரிவையும் பத்து, பத்து சிப்பாய்களைக் கொண்ட பிரிவுகளில் பங்கிட்டு விட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரிடமிருந்து சிறிது தொலைவில் அசைந்து கொண்டிருந்தார்கள். பின்னர் ஒவ்வொருவராக இஸ்லாமிய படையிலிருந்து பத்து பத்து பிரிவுகள் சந்தித்து சென்றன. ஒவ்வொரு பிரிவும் வந்தபோது தக்பீர் முழக்கங்களை இட்டன. இஸ்லாமிய படைக்கு தொடர்ந்து படை உதவி கிடைத்து வருகின்றது என்பது போன்று தெரிய வந்தது.

ஹஸ்ரத் கஃகாஃ அவர்கள் முதல் பகுதியில் வந்தடைந்தார்கள். அவர்கள் வந்ததும் முஸ்லிம்களுக்கு ஸலாம் கூறினார்கள். படையின் வருகை குறித்து நற்செய்தி கூறினார்கள். பின்னர் மக்களே! நான் செய்வதை நீங்கள் செய்யுங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு கூறி விட்டு அன்னார் முன்னேறினார்கள். மேலும் அவர்கள் சண்டையிட்டார்கள். இதைக்கேட்ட பஹ்மன் ஜாஸ்விய்யா போருக்காக வெளியேறினான். எனவே இருவருக்கும் இடையே போர் நடந்தது. ஹஸ்ரத் கஃகாஃ (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். பஹ்மன்ஜாஸ்வியா கொலை செய்யப்பட்டதாலும், முஸ்லிம்களின் படைக்கு உதவி வந்ததன் காரணத்தாலும் முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஹஸ்ரத் கஃகாஃ (ரலி) அவர்களைக் குறித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு கூற்று உள்ளது. அதாவது இவரைப் போன்ற நபர்களைக் கொண்ட படை தோற்கடிக்க முடியாத படையாக இருக்கும் என்று கூறி வந்தார்கள்.

அந்த நாளில் ஈரானியர்கள் தமது யானைகளுடன் போரிட முடியாமல் போனது. ஏனென்றால் அந்த யானைகளின் சேணம் முந்தைய நாளில் உடைந்திருந்தது. எனவே காலை முதலே அவர்கள் அந்த பணியில் மும்முரமாக இருந்தார்கள். முஸ்லிம்கள் இந்த வழிமுறையை மேற்கொண்டார்கள். தமது ஒட்டகங்களை ஆடைகளால் மறைத்தார்கள். அதன் காரணமாக ஒட்டகங்கள் மறைந்து விட்டன. அவற்றின் மேல் துணிகளை விரித்தார்கள். அவர்களின் ஒட்டகமும் அதன் கழுத்துக்களும் அனைத்தும் மறைந்து விட்டன. அது ஒரு யானையைப் போன்று தென்பட்டது. இந்த ஒட்டகம் எங்கு சென்றாலும் ஈரானியர்களின் குதிரைகள் பாய்வதற்கு தயாராக இருந்தன. அதாவது முந்தைய நாளில் முஸ்லிம்களின் குதிரைகள் பாய்ந்து கொண்டிருந்ததைப் போன்று இருந்தது. காலையிலிருந்து நண்பகல் வரை இரு தரப்பு குதிரைகளும் போரிட்டுக் கொண்டிருந்தன. பகல் பொழுது பாதிக்கு மேல் கழிந்திருந்தபோது பொதுவான போர் ஆரம்பமானது. பாதியை விட கூடுதல் நேரம் கழிந்தவுடன் பொதுவான போர் தொடங்கியது. அது இரவு வரை நீடித்தது. இந்த இரண்டாவது நாள் யவ்மே அக்வாஸ் என்று கூறப்படுகின்றது. இந்த நாள் முஸ்லிம்களுக்கு சாதகமாக அமைந்தது. அதாவது அந்த நாளில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது.

மூன்றாவது நாள் காலை விடிந்ததும் இரு தரப்பு படைகளும் தத்தமது இடங்களில் நின்றன. அந்த நாள் இரத்தம் நிறைந்த போர் நடைபெற்றது. முஸ்லிம் ஷுஹதாக்களின் எண்ணிக்கை 2000 (இரண்டாயிரம்) ஆக இருந்தது. ஈரானிய படை சார்பாக 10,000 (பத்தாயிரம்) போர் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்கள் தங்களில் கொலையுண்டவர்களை நல்லடக்கம் செய்து வந்தார்கள். காயமுற்றவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். ஆயினும் ஈரானிய படையின் சார்பாக கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் அங்கேயே மைதானத்தில் கிடந்தன. அந்த நாள் இரவு ஈரானியர்கள் தமது கைகளால் சேணம் போன்றவற்றை சரி செய்தார்கள். படையின் ஒரு பெரும் பிரிவு நடந்து சென்று யானையின் பாதுகாப்பிற்காக அதனுடன் இருந்தது.

இருந்தபோதிலும் அன்றைய தினம் இதற்கு முன்பு அழிவை ஏற்படுத்தியதுபோன்று அவற்றால் அழிவை ஏற்படுத்த முடியவில்லை. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கஃகாஃ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு தூதுச் செய்தி அனுப்பினார்கள்: அதாவது ஈரானிய தூதுவர் யானைகளின் மூலம் என்னை பின்தொடர்கின்றார். எனவே ஹஸ்ரத் கஃகாஃ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) ஆகியோர் தாக்குதல் செய்து அந்த யானையின் இரண்டு கண்களையும் ஈட்டியால் குத்தினார்கள். அதன் காரணமாக யானை சுயநினைவை இழந்து தன்மீது அமர்ந்திருந்த நபரை கீழே தள்ளி விட்டது. அதனுடைய தும்பிக்கையும் வெட்டப்பட்டது. பின்னர் அம்புகளால் தாக்குதல் நடத்தி அதனை விழச் செய்வதில் என்னை நிர்பந்தத்திற்கு உள்ளாக்கி விட்டது. இதற்குப் பிறகு ஏனைய முஸ்லிம்களும் மற்றொரு யானையின் கண்களில் குத்தினார்கள். சில முறை அது ஓடி முஸ்லிம்களின் படைக்குள் வந்தது. சில முறை அது ஈரானியர்களின் படைக்குள் சென்றது.

இறுதியில் அந்த யானை அஜ்ஸப் என்று அழைக்கப்பட்டு வந்தது. அது அதீக் நதியை நோக்கி ஓடியது. அதனைப் பார்த்த ஏனைய யானைகளும் அதற்குப் பின்னால் சென்று நதியில் குதித்து விட்டன. அது தமது சவாரிகளுடன் அழிந்து போனது. பகல் மறையும் வரை இந்தப் போர் நீடித்தது. அந்த நாள் யவ்மே அமாஸ் என்று கூறப்படுகின்றது. இஷா தொழுகைக்குப் பிறகு மிகக் கடுமையான சூழல், பதற்றம் ஏற்பட்டது. அது

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

குறித்து இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது அந்த நேரத்தில் வாள் வீச்சின் சப்தம் இவ்வாறு கேட்டுக் கொண்டிருந்தது. உதாரணமாக கொல்லன் தனது கடையில் இரும்பை அறுக்கும்போது ஏற்படும் சப்தத்தைப் போன்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களும் விழித்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் சன்னிதானத்தில் துஆவில் மும்முரமாக இருந்தார்கள். அரபிகளும், அரபி அல்லாதவர்களும் அந்த இரவில் நடந்ததைப் போன்ற சம்பவத்தை ஒருபோதும் கண்டிருக்கவில்லை. காலை விடிந்ததும் முஸ்லிம்களின் உணர்வும், உத்வேகமும் தொடர்ந்து நீடித்திருந்தது. மேலும் அவர்கள் வெற்றி பெற்றிருந்தார்கள். அந்த இரவுக்குப் பிறகு வரக்கூடிய ஒவ்வொரு காலைப்பொழுதும் அனைத்து மக்களுக்கும் சோர்வின் தன்மை கொண்டதாக இருந்தது. ஏனென்றால் அவர்கள் முழு இரவும் விழித்துக் கொண்டிருந்தார்கள். அந்த இரவை لَيْلَةُ الْهَرِيْرِ என்று கூறுகின்றனர்.

அதற்குரிய காரணம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது இரவில் முஸ்லிம்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளவில்லை. மாறாக அவர்கள் கிசுகிசுத்துக் கொண்டே இருந்தனர். அது வில்லிலிருநது அம்புகள் வீசப்படுகின்றபோது வெளியேறும் மிக லேசான சப்தத்தை போன்ற சப்தமாக இருந்தது. அல்லது உரலில் அரைக்கின்றபோது வரும் மிக மென்மையான சப்தமாக இருந்தது. முஸ்லிம்கள் அந்த இரவில் இரவின் துவக்கத்திலிருந்து காலை வரை மிகவும் துணிச்சலுடன் போரிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் உரத்த குரலில் பேசாமல் இருந்தனர். மாறாக, மெதுமெதுவாகவே பேசிக் கொண்டிருந்தனர். இதன் காரணமாக அந்த இரவின் பெயர் لَيْلَةُ الْهَرِيْرِ என்றுபிரபல்யமாகி விட்டது.

எவ்வாறிருப்பினும் நான்காம் நாள் காலை மீண்டும் நண்பகல் வரை போர் நீடித்தது. ஈரானியர்கள் பின் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகு ருஸ்தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது அவன் அதீக் நதியை நோக்கி ஓடி விட்டான். அவன் நதியில் குதித்தபோது ஹிலால் என்ற பெயர் கொண்ட முஸ்லிம் அவனை பிடித்து விட்டார். அவனை கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தார். பின்னர் அவனை கொன்று விட்டார். அதன் பிறகு ருஸ்தமை கொன்ற அந்த முஸ்லிம் நான் ருஸ்தமை கொன்று விட்டேன். என்னிடம் வாருங்கள் என்று அறிவிப்புச் செய்தார். முஸ்லிம்கள் எல்லா பக்கத்திலிருந்தும் அவரை சூழ்ந்து கொண்டனர். மிகவும் சப்தத்துடன் தக்பீர் முழக்கமிட்டனர். ருஸ்தம் கொலை செய்யப்பட்ட செய்தி அறிந்து பாரசீகர்கள் தோல்வியுற்று ஓடிவிட்டனர். முஸ்லிம்கள் அவர்களை பின்தொடர்ந்து சென்று கொன்று விட்டனர். மேலும் ஒரு பெரும் எண்ணிக்கையில் அவர்களை சிறை பிடித்தனர். அந்த நாள் யவ்மே காதிஸிய்யா என்று கூறப்படுகின்றது.

ஒவ்வொரு நாளும் காலை விடிந்ததும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மைதானத்திலிருந்து வெளியே வரக்கூடிய சவாரிகளிடம் காதிஸிய்யா போரைப் பற்றி கேட்டு வந்தார்கள். போரைப் பற்றி நற்செய்தி வழங்கக்கூடிய தூதுவர், அல்லாஹ் இணை வைப்பவர்களுக்கு தோல்வியை வழங்கி விட்டான் என்று கூறியதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது ஓடிக் கொண்டே சென்றார்கள். தகவல்களை பெற்றுக் கொண்டு சென்றார்கள். அப்போது அந்த தூதுவர் தனது ஒட்டகத்தில் அமர்ந்திருந்தார். அவரால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அடையாளம் கூட காண முடியவில்லை. அந்தத் தூதுவர் மதீனாவில் நுழைந்தபோது மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அமீருல் மூமினீன் என்று கூறிக்கொண்டு ஸலாம் கூறியபோது, தாங்கள் தான் அமீருல் மூமினீன் ஆவீர்கள் என்று ஏன் என்னிடம் கூறவில்லை? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அந்த தூதுவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எனது சகோதரரே! அதுவொரு விஷயமல்ல என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் வெற்றிக்கான தகவல் கிடைத்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொதுக்கூட்டத்தில் வெற்றிக்கான செய்தியை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு ஒரு தாக்கம் நிறைந்த சொற்பொழிவை ஆற்றினார்கள். படை தனது இடத்தில் நின்று கொள்ளட்டும் என்றும், படை மீண்டும் ஒழுங்குபடுத்தப்படும் என்றும், மீண்டும் சீர்திருத்தத்திற்குரிய விவகாரங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அன்னார் கட்டளை அனுப்பினார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கிலாஃபத் அவையிலிருந்து வழிகாட்டல் பெற்றார்கள். காதிஸிய்யா போரில் ஏராளமான மக்கள் ஈரானியர்களில் இவ்வாறு இருந்தனர். அதாவது அதற்கு முன்பு அவர்கள் முஸ்லிம்களுடன் சமாதானம் செய்து கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் ஈரானிய அரசாங்கம் தங்களின் விருப்பத்திற்கு எதிராக வலுக்கட்டாயமாக தங்களை அவர்களுடன் இணைத்துக் கொண்டார்கள் என்று வாதிட்டு வந்தனர். நாங்கள் எங்கள் விருப்பத்துடன் வரவில்லை. மாறாக, நிர்பந்தத்திற்குள்ளாகி வந்திருந்தோம் என்றும் கூறினர். ஏராளமான மக்களின் இந்த வாதம் சரியானதாகவும் இருந்தது. ஏராளமான மக்கள் போரின் காரணமாக அந்தப் பகுதியை விட்டு விட்டு எதிரியின் பகுதியின் பக்கம் சென்றிருந்தனர். மேலும் திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த விவகாரத்தில் முடிவெடுப்பதற்காக மதீனாவில் மஜ்லிஸே ஷூராவின் கூட்டத்தை கூட்டினார்கள். முடிவெடுத்த பிறகு இந்த வழிகாட்டலை அனுப்பினார்கள். அதாவது முஸ்லிம்களுடன் எவர்கள் ஒப்பந்தம் செய்திருந்தார்களோ அவர்கள் தமது உடன்படிக்கையை முழுமை செய்யட்டும். மேலும் தமது பகுதியில் தங்கி இருக்கட்டும். அந்த உடன்படிக்கையை முழுமையான நன்றியுணர்வுடனும், மரியாதையுடனும் பேணட்டும். எந்த மக்களுடன் முஸ்லிம்களின் எந்த உடன்படிக்கையும் இல்லையோ, மேலும் அவர்கள் தமது பகுதியில் இருக்கின்றார்கள் என்றால் மேலும் எதிரியின் சார்பாக நின்று எங்களுக்கு எதிராக அணிதிரளவில்லையென்றால் உடன்படிக்கை செய்து கொண்டவரிடம் எப்படி நடந்து கொள்ளப்படுமோ அதுபோன்றே அவர்களிடமும் நடந்து கொள்ளப்படும்.

மேலும் ஈரானிய அரசாங்கம் வலுக்கட்டாயமாக எங்களை படையுடன் இணைத்துக் கொண்டது என்று எவர்கள் வாதம் செய்கின்றார்களோ அவர்களின் வாதம் உண்மை என தெரிய வந்தால் பின்னர் அவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வதில் எந்தக் குறைவும் வைக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டார்கள். அவர்களை ஒன்றும் கூறக்கூடாது. மேலும் நாங்கள் பலவந்தமாக அழைத்து வரப்பட்டோம் என்ற வாதத்தில் எவர்கள் பொய்யர்களாக இருக்கின்றார்களோ மேலும் தமது சுய விருப்பத்தின் பெயரில் எதிரிகளுடன் இணைந்து கொண்டு உங்களுக்கு எதிராக செயல்படுகின்றார்களோ அவர்களுடனான முந்தைய ஒப்பந்தம் ரத்தாகி விட்டது. ஏனென்றால் அவர்கள் எதிரிகளுக்கு உதவி செய்துள்ளனர். இப்போது ஒன்று அவர்களுடன் மீண்டும் புதிதாக உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள் அல்லது அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்து விடுங்கள்.

அதாவது மீண்டும் அவர்களுடன் உடன்படிக்கை செய்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றி விட வேண்டும். அவர்கள் எங்கு இருக்க விரும்புகின்றார்களோ அங்கு பாதுகாப்புடன் தங்குவதற்காக சென்று விடட்டும். எவர்களுடன் உடன்படிக்கை இல்லையோ அவர்கள் இந்த பகுதியை விட்டு விட்டு எதிரிகளுடன் சென்று விட்டார்களோ, மேலும் உங்களுக்கு எதிரான போரில் பங்கு பெற்றார்களோ அவர்களைக் குறித்து நீங்கள் உகந்ததாக கருதினால் அவர்களை அழைத்துக் கொள்ளுங்கள். பின்னர் மீண்டும் தொடர்ந்து உங்களுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் நீங்கள் அவர்களுக்கு எதிராக போரை தொடங்குங்கள். ஒருவேளை அவர்கள் மீண்டும் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் பின்னர் பரவாயில்லை.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

உங்களுக்கும் போருக்கான உரிமை உள்ளது. ஆனால் அவர்கள் எதிரிகளுடன் இணைந்த பிறகும் விலகிக் கொண்டால் கூட பின்னர் அவர்களை விட்டு விடுங்கள்.

இந்த கட்டளைகள் பயனுள்ளதாக நிரூபணமாகின. அக்கம் பக்கத்தில் இருந்த மக்கள் திரும்பி வந்து தமது நிலங்களில் குடியேறினர். இது பரந்துபட்ட தைரியத்திற்கான ஓர் ஆழகிய உதாரணம் ஆகும். எந்த மக்கள் ஒரு முக்கியமான நேரத்தில் தனது உடன்படிக்கைகளை மறந்து எதிரிகளுடன் சேர்ந்து கொண்டார்களோ அவர்களையும் தமது நிலத்தில் குடியேறுவதற்கு முஸ்லிம்கள் அழைத்தார்கள். இது எவ்வளவு பரந்துபட்ட தைரியமாகும். ஒரு வகையில் மதீனாவின் மஜ்லிஸே ஷூரா அவர்களுக்கு இந்த விவகாரத்தில் இதற்கான அனுமதியை வழங்கி இருந்தது. அதாவது அதுபோன்ற ஈரானியர்களை விரும்பினால் திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள். மேலும் அவர்களின் இடங்களை அவர்களிடம் பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள். முஸ்லிம்களிடம் நிலங்களை பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள்.

வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்: இந்த அபாயகரமான நேரத்தில் உடன்படிக்கையை மீறியவர்கள் திரும்ப அழைக்கப்பட்டார்கள். அப்போது அவர்களின் நிலங்களின் மீது பொதுவான நிலத்தை விட அதிகமான வரி விதிக்கப்பட்டது. ஒரேயொரு நிபந்தனை தான் இருந்தது. அது என்னவென்றால், நீங்கள் உடன்படிக்கையை மீறினீர்கள். சரி! பரவாயில்லை. திரும்பி வாருங்கள். உங்களது நிலத்தில் குடியேறிக் கொள்ளுங்கள். ஆனால் நிலத்திற்கான வரி மற்றவர்களைக் காட்டிலும் உங்களுக்கு கூடுதலாக கொடுக்க நேரிடும். எனினும் எல்லா நிலையிலும் நிச்சயமாக நீங்களே நிலத்தின் உரிமையாளர்களாக இருப்பீர்கள்.

ஈராக்கின் வெற்றிகளின் தொடரில் இந்தப் போருக்கு மிக தீர்க்கமான முடிவு என்ற அந்தஸ்து உள்ளது. முஸ்லிம் முஜாஹித்கள் மிகவும் கடுமையான எதிர்ப்பின் நிலையில் மிகவும் உறுதிப்பாட்டுடன் ஆண்மையுடன் போரிட்டார்கள்.

வரலாற்று ஆய்வாளர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: கிலாஃபத் அவையிலிருந்து மக்களுக்கு உதவித்தொகை நிர்ணயிக்கப்பட்டபோது காதிஸிய்யாவில் பங்கு பெற்ற ஒரு காரணமும் தனித்தன்மை வாய்ந்ததாக கருதப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காதிஸிய்யா போரில் பங்கு பெற்றவர்களுக்கு அதிகமான ஊக்கத் தொகையை நிர்ணயித்தார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 435, 436 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 301–333 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 267 & தாரீக் தப்ரி மொழியாக்கம் தொகுதி 2 பாகம் 2 பக்கம் 263, 310, 325 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 84–89 – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமியாத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 94, 356)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காதிஸிய்யா போரைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறியவற்றிலிருந்து சில பகுதிகளை நான் எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் குஸ்ரு பர்வேஸின் மகன்வழிப் பேரன் யஸவ் ஜஸவ் ஆட்சியில் அமர்ந்த பிறகு ஈராக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக பரந்துபட்ட அளவில் போர் செய்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தான். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களை எதிர்கொள்வதற்காக ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் காதிஸிய்யா மைதானத்தை போருக்காக தேர்ந்தெடுத்தார்கள். மேலும் அந்த இடத்தின் வரைபடத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அந்த இடம் பிடித்திருந்தது. ஆனால் ஈரானிய அரசருடன் போரிடுவதற்கு முன்பு உங்கள் மீது இந்த கடமை உள்ளது. அதாவது ஒரு பிரதிநிதி குழு ஒன்றை ஈரானிய அரசரிடம் அனுப்பி வையுங்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும்படி அவருக்கு அழைப்பு கொடுங்கள் என்று கடிதம் எழுதினார்கள்.

எனவே இந்த கட்டளை கிடைத்தவுடன் குழு ஒன்றை யஸவ் ஜஸவ்வை சந்திப்பதற்காக அன்னார் அனுப்பி வைத்தார்கள். இந்தக் குழு ஈரானிய அரசவையை அடைந்தவுடன் ஈரானிய அரசன் தமது மொழிபெயர்ப்பாளரிடம் கூறினான்: இவர்கள் ஏன் வந்துள்ளனர்? இவர்கள் நமது நாட்டில் ஏன் குழப்பங்கள் செய்து வருகின்றனர்? என்று கேட்கும்படி அவரிடம் கூறினான். அவர் அந்த கேள்வியை கேட்டதும் குழுவின் தலைவர் ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரன் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையை குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்: அதாவது இஸ்லாத்தை பரப்பும்படி அன்னார் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள். மேலும் உலகின் எல்லா மக்களுக்கும் உண்மையான மார்க்கத்தில் இணைவதற்கு அழைப்பு கொடுக்கும்படியும் அன்னார் (ஸல்) அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள். இந்த கட்டளைக்கேற்ப நாங்கள் தங்களின் சமூகத்தில் ஆஜராகி உள்ளோம். மேலும் நீங்கள் இஸ்லாத்தில் இணைவதற்கு நாங்கள் உங்களை அழைக்கின்றோம்.

யஸவ் ஜர்த் இந்த பதிலைக் கேட்டு மிகவும் கோபமுற்றான். நீங்கள் ஒரு காட்டுமிராண்டி சமுதாயமாகவும், மரணித்தவற்றை உண்ணக்கூடிய சமுதாயமாகவும் இருந்தீர்கள். பசியும், பட்டினியும் இந்த தாக்குதலை செய்யும்படி உங்களை நிர்பந்தத்திற்குள்ளாக்கி இருந்தால் நீங்கள் மன நிறைவுடன் வாழ்க்கையை கழிப்பதற்கு தேவையான அளவில் உண்பதற்கும், குடிப்பதற்கும் தேவையான பொருட்களை நான் உங்கள் அனைவருக்கும் வழங்குவதற்கு தயாராக உள்ளேன். அதேபோன்று நீங்கள் உடுப்பதற்கும் நான் ஆடைகளை வழங்குவேன். நீங்கள் இந்த பொருட்களை பெற்றுக் கொண்டு உங்கள் நாடுகளுக்கு திரும்பிச் சென்று விடுங்கள். நீங்கள் எங்களுடன் போரிட்டு உங்களது உயிரை ஏன் வீணாக்க விரும்புகின்றீர்கள் என்று கூறினார்.

அவன் பேசி முடித்தவுடன் இஸ்லாமிய குழுவின் சார்பாக ஹஸ்ரத் முகீரா பின் ஸுரார்ரா எழுந்து நின்றார்கள். மேலும் நீங்கள் எங்களைப் பற்றி கூறிய விஷயங்கள் முற்றிலும் உண்மையாகும். நாங்கள் உண்மையில் ஒரு காட்டுமிராண்டி சமுதாயமாகவும், இறந்தவற்றை உண்ணக்கூடிய சமுதாயமாகவும் இருந்தோம். பாம்புகளையும், தேள்களையும், தவளைகளையும் கூட நாங்கள் உண்டு வந்தோம். ஆனால் அல்லாஹ் எங்கள் மீது அருள் செய்தான். அவன் எங்களின் நேர்வழிக்காக தனது தூதரை அனுப்பினான். நாங்கள் அவர் மீது ஈமான் கொண்டோம். அவரது கூற்றின்படி நாங்கள் அமல் செய்தோம். அதன் விளைவு என்னவானது என்றால், தற்போது எங்களிடத்தில் ஒரு புரட்சி உருவாகி விட்டது. நீங்கள் குறிப்பிட்ட அந்த சீர்கேடுகள் தற்போது எங்களிடம் இல்லை. தற்போது நாங்கள் எந்தவொரு பேராசைக்கும் ஆயத்தமாக இல்லை. உங்களுடன் எங்களுக்கு போர் ஆரம்பமாகி விட்டது. போர் மைதானத்திலேயே இதற்கு முடிவு எட்டப்படும். உங்களுக்கு இதுவே விருப்பம் என்றால் எங்களின் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் மேலும் எங்களுடன் நீங்கள் போர் புரிய விரும்புகின்றீர்கள் என்றால் பின்னர் (அது) உங்கள் விருப்பம். நாங்களும் போர் செய்வோம். உலகியல் பொருட்களின் மீதான பேராசை எங்களை எங்களது எண்ணத்திலிருந்து விலக்கி வைக்க முடியாது என்று கூறினார்கள்.

யஸவ் ஜர்த் இந்த விஷயத்தை கேட்டதும் மிகக் கடுமையாக கோபமுற்றான். அவன் தனது ஓர் ஊழியரிடம், சென்று ஒரு மண் மூட்டையை எடுத்து வரும்படி கூறினான். மண் மூட்டை கொண்டு வரப்பட்டது. அரசன் இஸ்லாமிய

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

குழுவின் தலைவரை முன்னால் அழைத்து, நீங்கள் எனது விண்ணப்பத்தை மறுத்து விட்டீர்கள். இனி இந்த மண் மூட்டையை தவிர்த்து உங்களுக்கு வேறு எதுவும் கிடைக்காது என்று கூறினான். அந்த சஹாபி மிகவும் பொறுப்புடன் முன்னால் சென்றார்கள். மேலும் தனது தலையை குனிந்து விட்டார்கள். (ஏற்கனவே கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இது சிறிய அளவிலான விளக்கமே ஆகும்). அன்னார் தமது தலையை தாழ்த்தினார்கள். மண் மூட்டையை தமது முதுகில் சுமந்து கொண்டார்கள். பின்னர் அன்னார் துள்ளிக்குதித்து வேகமாக அவனது அவையிலிருந்து கிளம்பி விட்டார்கள். மேலும் இன்று ஈரானிய அரசன் தனது கரங்களால் தனது நாட்டின் மண்ணை நம்மிடம் ஒப்படைத்து விட்டார் என்று தனது தோழர்களிடம் உரத்த குரலில் கூறினார்கள். பின்னர் குதிரையின் மீது சவாரி செய்தவாறு வேகமாக அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள். அன்னாரின் இந்த முழக்கத்தை கேட்டதும் அரசன் நடுநடுங்கி விட்டான்.

அவன் தனது அரசவை ஊழியரிடம் கூறினான்: ஓடுங்கள். அந்த மண் மூட்டையை அவரிடமிருந்து திரும்ப பெற்று வாருங்கள் என்று கூறினான். நான் எனது கையால் எனது நாட்டின் மண்ணை அவரிடம் ஒப்படைத்து விட்டேன். இது மிகவும் தீய சகுனமாகும் என்றும் கூறினான். ஆனால் அதற்குள் குதிரையில் சவாரி செய்தவாறு அவர்கள் வெகு தொலைவிற்கு சென்று விட்டார்கள். ஆயினும் அன்னார் கூறியதே இறுதியில் நடந்தது. சில ஆண்டுகளுக்குள் முழு ஈரானும் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்து விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: இந்த மகத்துவமிக்க மாற்றம் முஸ்லிம்களிடம் ஏன் ஏற்பட்டது? ஏனென்றால் திருக்குர்ஆனின் போதனைகள் அவர்களின் ஒழுக்கங்களிலும், அவர்களின் பழக்கவழக்கங்களிலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருந்தது. அவர்களின் முந்தைய வாழ்க்கையின் மீது ஒரு மரணத்தை ஏற்படுத்தி இருந்தது. மேலும் அவர்களை உயர்தரமான நல்லொழுக்கத்திலும், நற்பண்புகளிலும் கொண்டு வந்து நிலைநாட்டியது. அதன் காரணமாகவே இந்த புரட்சி ஏற்பட்டது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 204,205)

எனவே திருக்குர்ஆனின் போதனைகளின்படி அமல் செய்வதன் மூலமாகவே உண்மையான புரட்சி ஏற்படுகின்றன. இன்ஷா அல்லாஹ் இனியும் இந்த நற்குறிப்பு தொடரும்.

(தமிழில்: மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

*(மல்ஃபூஸாத்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பயன்படுத்தவில்லை. இது அவர்களின் சொந்த துர்பாக்கியமாகும். இறைவனால் வழங்கப்பட்ட அந்த ஆற்றல்களை பயன்படுத்துபவர் நற்பேறு பெற்றவரும், அருளுக்குரியவரும் ஆவார். ஏராளமான நபர்கள் இவ்வாறு உள்ளனர். அதாவது நீங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள். மேலும் அவனது கட்டளைகளை பேணுங்கள். மேலும் அவன் தடுத்தவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் நாங்கள் என்ன இறைநேசராக ஆக வேண்டுமா? என்று கூறி விடுகின்றனர். இதுபோன்ற கூற்றுகள் என்னைப் பொறுத்தவரை குஃப்ர் (நிராகரிப்பு) ஆகும். மேலும் இறைவன் மீது தப்பெண்ணம் கொள்வதாகும். இறைவனிடத்தில் என்ன குறை உள்ளது? அவனிடம் அரசாங்கத்தைப் போன்று எல்லைக்குட்பட்ட ஊழியர்கள் இல்லை. அவனிடம் உள்ளவை விரைவில் முடிந்து விடக்கூடியவையும் அல்ல. மாறாக, இறைவனிடத்தில் உண்மையான தொடர்புகளை உருவாக்கிக் கொள்பவர் முந்தைய இறைநேசர்கள் பெற்ற அருட்கொடைகளிலிருந்து பயன்பெற முடியும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 318 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*(திருக்குர்ஆன் விளக்கவுரை... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

விரிவுபடுத்துகின்றனர். ஹஸ்ரத் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள் மீது வெற்றி பெறுவதற்காக செல்வங்களை சம்பாதித்தார்கள். தொலை நோக்கு திட்டங்களை தீட்டினார்கள். ஆனால் முஹம்மது ரஸூல் (ஸல) அவர்கள் இந்த அனைத்து விஷயங்களிலும் ஒன்றுமற்றவர்களாக இருந்தார்கள். அவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே வெற்றி பெறுவார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெற்றியைப் பார்த்து நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் ஏக்கம் ஏற்படும் என்று இறைவன் கூறுகின்றான்.

لَوْ كَانُوْا مُسْلِمِيْنَ (முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டுமே) என்பதில் நிராகரிப்பாளர்களின் தற்காலிக உணர்வு உள்ளது. இதன் பக்கமே இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர்கள் உண்பதிலும், பருகுவதிலும், செல்வங்களை சம்பாதிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். தற்காலிக உணர்வுகள் மனிதனுக்கு பயனளிப்பதில்லை. மாறாக, நிரந்தர உணர்வுகளே பயனளிக்கின்றன. முஸ்லிம்களின் நிரந்தர உணர்வு என்பது முஸ்லிமாகி விட வேண்டும் என்பதாக உள்ளது. தற்காலிகமாக அவர்கள் உண்ணுகின்றனர்; பருகுகின்றனர்; செல்வத்தை சம்பாதிக்கின்றனர்; எதிர்காலத்திற்காக சில திட்டங்களையும் தீட்டுகின்றனர். எனவே இந்த அனைத்து பணிகளுக்கு மத்தியிலும் அவர்கள் நேர்வழி பெறுகின்றார்கள். ஆனால் நிராகரிப்பாளர் நேர்வழி பெறுவதில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 பக்கம் 7 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

நீங்கள் MTA பாருங்கள். தங்களது மஜ்லிஸ்களுக்கு மத்தியில் Online கடிதங்கள் தொடர்பாக ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: சில சிறப்பான பொருளாதார விவகாரங்கள் உள்ளன. பொதுத்துறையின் வழிகாட்டல்கள் உள்ளன. அவை Online ல் நடைபெறக்கூடாது. எனவே முறையாக எழுதி தலைமையகத்திலிருந்து வழிகாட்டல் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் (அய்ய) அவர்களுடனான ஆஸ்திரேலிய குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய செயற்குழுவின் இந்த சந்திப்பு 7 மணிக்கு நிறைவுற்றது. கூட்டத்தின் இறுதியில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் ஆமிலா உறுப்பினர்களுக்கு பேனாவை அன்பளிப்பாக வழங்கினார்கள். மேலும் குழு நிழற்படம் எடுத்துக் கொள்வதற்கும் கண்ணியம் வழங்கினார்கள்.

**ஹுஸூர் அவர்களுடன் ஆஸ்திரேலியாவின் தேசிய அன்ஸாருல்லாஹ் செயற்குழு கூட்டம்**

இதற்குப் பிறகு நிகழ்ச்சிநிரலுக்கேற்ப ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் ஆஸ்திரேலியாவின் தேசிய அன்ஸாருல்லாஹ்வின் செயற்குழு கூட்டம் தொடங்கியது. ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள். முதலில் காயித் உமூமியிடம் ஹுஸூர் அவர்கள் மஜ்லிஸ்களின் எண்ணிக்கையை குறித்து கேட்டார்கள். 14 அன்ஸாருல்லாஹ் மஜ்லிஸ்கள் இருப்பதாகவும், அனைவரிடமிருந்தும் தொடர்ந்து அறிக்கைகள் வருவதாகவும் காயித் உமூமி கூறினார். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அவர்கள் அனைவரின் அறிக்கையையும் படித்து தொலைபேசியில் அல்ல. மாறாக, கடிதம் மூலம் அது குறித்த கருத்துக்களை அனுப்புங்கள். ஒவ்வொரு அறிக்கை குறித்தும் கருத்து இடம் பெற வேண்டும். இது அவசியமாகும்.

காயித் மால் அவர்கள் தமது அறிக்கையை முன் வைத்தவாறு, அன்ஸார்களின் எண்ணிக்கை 411 என்றும், எங்களது வருடாந்திர பட்ஜெட் 92000 டாலர்கள் என்றும் கூறினார். சில அன்ஸார் மிகவும் நல்ல சம்பாதிக்கக்கூடியவர்களாக உள்ளனர். எனவே உங்களின் சந்தாவை இதைவிட அதிகரிக்க முடியும். இரண்டு மடங்கு (கூட) அதிகரிக்க முடியும் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

(தொடரும்....)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

***தொலைபேசி எண்: 1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 26 Aug 2021 Issue No. 34

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் 2013)

**20 அக்டோபர் 2013 (ஞாயிற்றுக்கிழமை)**

**ஆஸ்திரேலியாவின் தேசிய குத்தாமுல் அஹ்மதிய்யா செயற்குழு உறுப்பினர்களின் ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் சந்திப்பு**

♦ ஒரு கேள்விக்கு பதிலாக ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: **எவர் நாஸிராகவோ அல்லது காதிமாகவோ இருக்கின்றாரோ அவர் தத்தமது கிளை அமைப்பின் சந்தாக்களில் பாக்கி வைத்துள்ளார் என்றால் அவர் கிளை அமைப்பின் பொறுப்பாளராகவும் ஆக முடியாது. ஜமாஅத்தின் பொறுப்பாளராகவும் ஆக முடியாது.**

சந்தா கொடுப்பது தொடர்பாக ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: கட்டாயச் சந்தாக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாதமும் வருமானத்திற்கேற்ப உடனுக்குடன் (சந்தா) கொடுத்து விட வேண்டும். கடைசி நாட்களில் சென்று சந்தா கொடுப்பதற்கு நாம் முயற்சி செய்கின்றோம். மாதம் மாதம் வருமானம் வருகின்றதென்றால் பின்னர் ஒவ்வொரு மாதமும் சந்தா கொடுக்க வேண்டும். ஒருவர் ஏதாவதொரு நிர்பந்தத்தின் காரணமாக வருமானத்திற்கு குறைவாக கொடுக்க வேண்டுமென்றால் பின்னர் அவர் முறையாக எழுதி மன்னிப்பு பெற்றுக் கொள்ளலாம்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: சிலருக்கு நான்கு, ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் வருமானம் வருகின்றது. அவர்களைப் பொறுத்தவரை நிர்பந்தம் உள்ளது. அவர்கள் அந்த காலத்திற்குரிய சந்தாவை மொத்தமாக கொடுப்பார்கள். ஆனால் தொடர்ந்து வருமானம் பெறக்கூடியவர்கள் ஒவ்வொரு மாதமும் அதை செலுத்தி விட வேண்டும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: வஸிய்யத் சந்தாவைப் பொறுத்தவரை அது குறைக்கப்படுவதும் இல்லை. மன்னிக்கப்படுவதும் இல்லை. அதில் எதனையும் குறைக்க முடியாது.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: சந்தா என்பது எந்த வரியும் இல்லை. இதனை உங்களுக்கு கூற வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் சூரா பக்ராவின் தொடக்கத்தில் இதைப் பற்றி கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

اَلَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ (2:4)

அதாவது அவர்கள் மறைவானவற்றை நம்பக்கூடியவர்கள் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுகின்றனர். மேலும் நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து அவர்கள் செலவு செய்கின்றனர். (2:4)

எனவே அல்லாஹ் இங்கு இந்த விஷயத்தை கூறியுள்ளான். அதாவது அவர்கள் தமது ஈமானை அதிகரிப்பதற்காகவும், இறையச்சத்தை பெறுவதற்காகவும், அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவும் பொருள் தியாகம் செய்கின்றனர். எனவே இந்த பொருள் தியாகம் ஒன்றும் Tax அல்ல. மேலும் இங்கு இந்த விஷயமும் பொருள்படும். அதாவது நாம் (அல்லாஹ்) வழங்கிய அறிவையும், ஆற்றல்களையும் அவர்கள் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும், இறைதிருப்தியை பெறுவதற்காகவும் செலவிடுகின்றனர்.

♦ அத்ஃபால்களின் பாடத்திட்டம் தொடர்பாக ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கான பாடத்திட்டத்தை நீங்கள் உங்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். யூ.கேவின் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா இவ்வாறு நிகழ்ச்சியை உருவாக்கியுள்ளார். அதாவது அவர் வக்ஃபே நவ் பாடத்திட்டத்தை கையில் எடுத்துள்ளார். மேலும் அதில் கூடுதலாக சேர்க்க வேண்டியவற்றை சேர்த்து அதே பாடத்திட்டத்தையே அத்ஃபால்களுக்கு வைத்துள்ளார். மேலும் அதனை Follow செய்து வருகின்றனர். நீங்களும் இதுபோன்று செய்யலாம். வக்ஃபே நவ் பாடத்திட்டத்தை எடுத்துக் கொண்டு அதில் கூடுதலாக சேர்க்க வேண்டிய விஷயத்தை சேர்த்துக் கொள்ளுங்கள். பிறகு அதனை உங்களுக்குரியதாக ஆக்கிக் கொள்ளுங்கள். Ahmadiyya Student Association பல்வேறு நாடுகளில் பணி செய்து வருகின்றது. இந்த Association பல்கலைக்கழகங்களில் கருத்தரங்கு நடத்துகின்றது. அதில் சில முறை மார்க்க தலைப்புகளும் இடம் பெறுகின்றன. அதன் மூலம் இஸ்லாத்திற்கு எதிரான தவறான புரிதல்கள் அகற்றப்படுகின்றன. மேலும் ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்படுகின்றது. சில முறை ஆய்விற்குரிய பல்வேறு தலைப்புகள் இடம் பெறுகின்றன. எனவே நீங்களும் இவ்வாறு செய்ய முடியும்.

♦ இங்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கென்று தனியாக கணக்கு இல்லை என்று கேள்வி கேட்கப்பட்டது. ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது குறித்து ஏராளமான விஷயங்களை பார்க்க நேரிடுகின்றது. அவ்வாறு செய்ய முடியுமா? செய்ய முடியாதா? என்று சட்டப்பூர்வ நிலைகளையும் நாம் பார்க்க வேண்டியதுள்ளது. எனவே நீங்கள் எழுதிக் கொடுங்கள். அது குறித்து ஆய்வு செய்யப்பட்டு உங்களுக்கு கூறப்படும்.

♦ Charity Walk தொடர்பாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு வழிகாட்டினார்கள்: குத்தாமுல் அஹ்மதிய்யா தனியாக Charity Walk நடத்த வேண்டும். யூ.கேவிலும், வேறு சில நாடுகளிலும் ஜமாஅத் தனியாக Charity Walk நடத்துகின்றது. அன்ஸாருல்லாஹ் அமைப்பு தனியாக நடத்துகின்றது. குத்தாமுல் அஹ்மதிய்யா அமைப்பு தனியாக நடத்துகின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: யூ.கே குத்தாமுல் அஹ்மதிய்யா தனது Charity Walk நிகழ்ச்சியின் போது மூன்று லட்சத்தி மூவாயிரம் பவுண்ட்களை ஒன்று திரட்டியது. பின்நாட்களில் அது பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: Humanity First முற்றிலும் தனியான விஷயமாகும். நீங்கள் ஜமாஅத் அளவிலும், தத்தமது கிளை அமைப்பின் கீழும் Charity Walk நடத்துங்கள். அந்த நிகழ்ச்சியில் வெளியிடப்படும் பத்திரிகை செய்திகளும், ஊடக செய்திகளும் உங்களது பெயரிலேயே வெளியிடப்படும்.

♦ ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது ஒரு நபர் தனது ஒரு உறுப்பை (organ) தானமாக கொடுக்க விரும்பினால் அது ஆகுமானதாகும். இதன் மூலம் ஒரு ஏழை நபருக்கு பயன் ஏற்படுகின்றது. இதை கொடுப்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: குழந்தைகளுக்கான வகுப்பிலும், மாணவர்களுக்கான வகுப்பிலும் நான் இதற்குரிய பதிலை வழங்கியுள்ளேன்.

*(தொடர்ச்சி 11வது பக்கம்...)*

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad